விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 27 சனிக்கிழமை (10.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 142

## உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்

# யாழ்.பல்கலை ஆசிரியர்கள் நேற்று கண்டன போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும் மாணவர் பிரதிநிதிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமைக்கு கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை போராட்டம் நடத்தியுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண சபைக்கு அரசு ஒத்துழைப்பு வழங்க மறுக்கிறது

### இந்திய குழுவினிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு



(கொழும்பு)

வடக்கு மாகாண சபைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகின்றது என்று இந்திய வெளிவிவகாரத்துறையின் உயரதிகாரி திருமதி சுஜித்ரா துரை உள்ளிட்ட அந்நாட்டு உயரதிகாரிகள் குழுவினருடனான சந்திப்பின்போது வடக்கு மாகாண சபையின் முதல 19 ஆம் பக்கம் பார்க்க..

## ஊடகவியலாளர்களை தாக்க முயற்சி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்கள் மீது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தில் வைத்து இனம்தெரியாத நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொள்ள முயற்சி மேற்கொண்ட சம்பவம் குறித்து ஊடகவியலாளர்கள் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்.கோவில் வீதியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இந்திய வெளிவிவகார உயரதிகாரி சுஜித்ரா துரை உள்ளிட்ட அந்நாட்டு உயரதிகாரிகள் 19 ஆம் பக்கம் பார்க்க..

## மன்னார் மனித புதைகுழி; வழக்கு விசாரணை நேற்று

(மன்னார்)

மன்னார் மாந்தை திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று மன்னார் நீதிமன்றத்தில் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்று இடம்பெற்ற விசாரணைகளின்போது காணாமல்போன கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக 5 சட்டத்தரணிகள் மன்றில ஆஜராகியிருந்தனர்.

கொழும்பில் இருந்து வருகை தந்த சட்டத்தரணிகளான ஆர்.ராஜகுலேந்திரன், ஆ.நிரஞ்சன் மற்றும் மன்னார் மாவட்ட சட்டத்தரணிகளான பிரிமூஸ் சிறாய்வா, ரி.வினோதன, எஸ்.லோகு ஆகிய 5 சட்டத்தரணிகளும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன் போது காணாமல் போன கடத்தப்பட்ட உறவினர்களின் கோரக்கைகளை சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

குறித்த புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள 19 ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவ அடக்குமுறைக்கு அஞ்சி புலம்பெயர் தமிழர்கள் மீள்வர தயக்கம்

### இந்திய உயரதிகாரியிடம் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொடரும் இராணுவ அடக்குமுறைகளினால் புலம்பெயர்ந்து சென்றவர்கள் மீளவருகைத் தருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

அச்ச உணர்வு அவர்களிடம் மேலோங்கிக் காணப்படுவதனால் நாட்டுக்கு மீண்டும் வரவேண்டும், சொந்த இடங்களில் மீள்குடியேற வேண்டும் என்ற நிலைப்பாடற்றவர்களாக புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய வெளிவிவகாரத்துரை அதிகாரி திருமதி சுஜித்திரா துரை சுவாமிநாதன் உள்ளிட்ட குழுவினரிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து எடுத்துரைத்துள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த அந்தக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில முற்பகல் 11 மணி 19 ஆம் பக்கம் பார்க்க..

## யாழ் வருகிறது யாழ்தேவி அடுத்த மாதம் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு புகையிரத சேவை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் இருந்து பளை வரையும் பளையில்இருந்து கொழும்பு வரையிலான புகையிரத சேவைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

பளையில் இருந்து காங்கேசன் துறை வரையான புகையிரத பாதையின் நிர்மாணப்பணிகளை இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வடக்கு ரயில் பாதைகள் புனரமைக்கும் பணிகள் யாழ்-சாவகசேரி பகுதி வரை பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் பளையிலிருந்து சாவகச்சேரி வரையான பரீட்சார்த்த ரயில் சேவை இடம்பெறவுள்ளது.

ஓமந்தையில் இருந்து காளி நொச்சி 20 ஆம் பக்கம் பார்க்க..

நாளை (11.05.2014) ஞாயிற்றுக் கிழமை வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும் பூநகரியின் புகழ்மாலை வரலாற்றுத் தொகுப்பை வாசித்து அதில் கேட்கப்படும் 10 கேள்விகளுக்கு பதிலளித்து பெறுமதியான பரிசில்களை வென்றிடுங்கள்.

மேலதிக விபரங்கள் நாளைய தொகுப்பில் ...

நடராஜா திருஞானபவன்
பூநகரியின் புகழ்மாலை
பாடலாசிரியர்
(C-7319)

## முள்ளிவாய்க்கால் நினைவுகூரலை விமல் விமர்சிக்கத் தகுதியில்லை

### நினைவுகூர உரிமையுண்டு என்கிறார் மனோ

(கொழும்பு)

1989-ம் ஆண்டு கிளர்ச்சியாளர்களை நினைவுகூரும் அமைச்சர் விமல் வீரவன்ச, முள்ளிவாய்க்கால் நினைவுகூரலை விமர்சிப்பது எங்ஙனம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மனோ மேலும் கூறியதாவது,

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி கட்சி, முள்ளிவாய்க்கால் நினைவுகூரலை விமர்சிக்கிறது. இதன்மூலம் புலிகளை நினைவுகூர முயறசி நடப்பதாக கூறுகிறது. எனவே இந்த நினைவுகூரலை நடத்துவோரை கைது செய்ய வேண்டும் என கூறுகிறது.

வடக்கில் இறுதி போர்முனையாக இருந்த முள்ளிவாய்க்காலை நினைவுகூருபவர்கள் தாங்கள் புலிகளை நினைவுகூரப்போவதாக இதுவரையில் சொல்லவில்லை. அந்தபோர்முனையில் புலிகள் இயக 19 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

11.05.2014 முதல் 15.05.2014 வரை 5 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
• பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்**

(C-7317)

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம், (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

# இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 180/=

இப்போது **கோழிப் பாகங்களும்** (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(சி-7316)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

# பிள்ளையார் இன்

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன. **விசேடமான உணவுகளான**
● மசாலா தோசை - 150/=மட்டுமே. ● பேப்பர் தோசை, வெங்காய தோசை, நெய்த் தோசை - 120/= மட்டுமே. ● பூரி, சப்பாத்தி - 100/ மட்டுமே. தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, பிறைட் றைஸ், சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம். (சி-7320)

இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829

# வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு

0213210815, 0215671532


# சமாதானம் நிலவுகிறது

(கொழும்பு)

இலங்கை தற்போது சமாதானத்தையும் பொருளாதார முன்னேற்றத்தையும் அனுபவித்துக் கொண்டிருப்பதாக இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்

பிரபல மலையாள கவிஞர் மற்றும் சமூக ஆர்வலரான எஸ்.பி.நம்பூதிரி எழுதிய "லங்கா தர்சனம்" என்ற மலையாள மொழி நூல் வெளியீட்டு விழா அண்மையில் துடில்லியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற பிரசாத் காரியவசம், இலங்கையில் சமாதானம ஏற்பட்டுள்ள நிலையில் நம்பூதிரியின் நூல் வெளியாகியுள்ளதாக குறிப்பிட்டார்.

கேரளாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சிறந்த உறவு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு இந்தியாவில் இருந்து கிடைத்த அரிய பரிசு பௌத்த தர்மமாகும் என்று காரியவசம் இதன்போது கூறினார். (செ-11)

# மரண அறிவித்தல்



## S.K.சிவலிங்கம்

(இய்வுபெற்ற கிராம அலுவலரும், ஸ்ரீ அம்மா பகவான் - சுவர்ணயுக ஆலய வளர்ச்சிக்கு முன்னின்றவரும்)

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட S.K.சிவலிங்கம் 06.05. 2014 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், பரமு - காலஞ்சென்ற பாலயோகம் தம்பதியரின் மருமகனும், சிவமங்கதேவியின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11.05.2014) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியான் ரோட்,சுழிபுரம்.
0777651719,0212051752 (6344)

தகவல்:
குடும்பத்தினர்


# யாத்திரைஸ்தலத் திருவிழா
# புனித பிலிப்பு நேரியார் ஆலயம்
# செம்பியன்பற்று
## 17.05.2014 - 26.05.2014



✝17.05.2014ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.

நற்கருணை வழிபாடு 25.05.2014 (ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.30 மணி

திருநாட் திருப்பலி 26.05.2014 (திங்கட்கிழமை) காலை 7 மணி

✝யாத்திரிகர்களின் நலன் கருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்படும்.

✝திருவிழாக் காலங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புவோர் ஆலய நிர்வாகத்துடன் 18.05.2014ம் திகதி காலை 10 மணிக்கு ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**புனிதரின் அருள் பெற்றுக் கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.**

பங்குத்தந்தையர்களும்
பங்கு மக்களும் (6345)


# மரண அறிவித்தல்

## இராசையா செல்லக்கண்டு



நாவலடி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா செல்லக்கண்டு 06. 05. 2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சேது தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, இராஜஸ்ரீ, இராஜலட்சுமி, இராஜசேகரம் (அப்பன்), சுபேந்திரராசா (பப்பி), இராஜநந்தினி, வசந்தரூபன் (வசந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்திரகுமார், நவநீதராசா (நவம்), கணேசமூர்த்தி, ஜெயந்தி, ரஜனி, விஸ்வரூபன் (காந்தி), அஜந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.05.2014) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
உடுப்பிட்டி. (சி-7321)

தகவல்:
நவநீதராசா (நவம்)
மருமகன் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறைக்கலாமன்றத்தின் வோறம் கருத்து பரிமாற்ற நிகழ்வு

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி யின் ஏற்பாட்டில் **வோறம்** எனும் கருத்து பரிமாற்ற நிகழ்வின் இம்மாதத்திற்கான நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 6.30 மணி வரை இல.286, யாழ். பிரதான வீதியிலமைந்துள்ள கலை த்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கவிஞர் சோ.பத்மநாதன் வழங்குவார். அத்துடன் சிறப்புரைகளை ஆங்கிலத்தில் சுவோதி நிறுவன இயக்குநர் அருட் தந்தை மேர்வின் பெர்னாண்டோவும் தமிழில் கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல்துறை தலைவர் அருட்தந்தைபோல்றொஹான் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து வோறம் எனும் விசேட ஆற்றுகைநிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது மனிதனின் பரிணாம வளர்ச்சியினை மையமாக வைத்து திருமறைக் கலாமன்றத்தில் தமிழ், சிங்கள கலைஞர்கள் ஒன்றிணைப்பில் சைகை மொழியை மட்டும் பயன்படுத்தி வார்த்தைகளற்ற மௌன நாடகம் கறுப்பு அரங்க தொழில்நுட்பத்துடன்காட்சிப்படுத்தப்படவுள்ளது.

விஞ்ஞானத்தில் ஆர்வமுள்ள அனைவருக்கும் இந் நாடகம் மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே, அனைவரும் ஆற்றுகை நிகழ்வில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு திருமறைக்கலாமன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி நாடகம் அண்மையில் கொழும்பில் மேடையேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (2-5)

# முதலாம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப வியல் நிறுவனத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான முதலாம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இந்நிறுவனப் பணிப் பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங் களை எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

எனவே, விண்ணப்பங்களை குறித்த திகதிக்கு முன்னதாக மேற்படி நிறுவனத்தில் பெற்று பூர்த்தி செய்து நிர்வாகப் பகுதியில் சமர்ப்பிக்கும் படியும் அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு நிறுவனத்தின் உதவிப் பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26 04 1948

மறைவு 10 05 2011

அமரர் இளையதம்பி மகாலிங்கம்

ஆண்டுகள் 3 சென்றாலும் உங்கள் நினைவுகள் அலைமோதி கரை மேவுகின்றது. தாண்டு போகுமோ? உங்கள் இனிய நினைவுகள் தாங்கி ஏங்கித் தவிக்கிறோம். மீண்டும் வருவீர் என வழி பார்த்திருந்தோம் மேகத்தின் வெளியைத் தான் கண்டோம். எங்கள் மனம் உங்கள் வரவு நிஜமல்ல என ஏற்க மறுக்கிறது. கண் நிறைந்த உம் தோற்றம் உயரிய குணம் கனவில் வந்து வருத்துகிறது. காலம் கடந்து வந்தாலும் நாங்கள் கலங்கிய விழிகளோடு தான் வாழ்கிறோம். எமை வளர்த்த எம் பெரியப்பா என்றைக்கும் எம்முடன் நீர் உமை எம் ஆயுள் வரை உன்னதமாய் நினைத்திருப்போம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(சி-7322)


# சந்தை கட்டடங்களின் வேலை முழுமை பெறவில்லை

## வியாபாரிகளும் மக்களும் கோரிக்கை

(மிருசுவில்)

வடக்கு மிருசுவில் சந்தைத் தொகுதியின் கட்டடங்கள் இது வரை காலமும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுவதாகவும் இதனால் சீரற்ற வியாபாரம் நடைபெறுவதாகவும்பொதுமக்களால்விசனம் தெரிவிக் கப்பட்டுள்ளது. குறித்த சந்தைத்தொகுதியில் இரண்டு கட்டடங்கள்காணப்படுகின்றன.

ஆனால்இருகட்டடங்களின் கூரைகள்வேயப்படாமல்வெளியாகத்தான் காணப்படுகின்றது.

இதற்கமைவாக ஒரு கட்டடத்தில் வியாபாரம் நடைபெற வேண்டும்எனபொது மக்களின் நிதியில்கூரைவேயப்பட்டுள்ளது.

மாறாக சில வியாபாரிகள் அண்மையில்உள்ளமதுபானக் கடைகளுக்கு முன்பாக தமது வியாபாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இச்சந்தையின் இன்னொரு கட்டடத்தின் கூரை வேயப் படாது காணப்படுகின்றது. இதனால் மழை காலங்களில் அக்கட்டடத்திற்குள் வியாபாரிகள் வியா பாரத்தை மேற்கொள்வது இல்லை.

இதனால் அப்பிரதேசத்தில் உள்ள பொதுமக்கள் அன்றாடம் தேவைப்படுகின்ற மரக்கறிகளை பெற்றுக்கொள் வதில் மிகுந்த சிரம த்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே குறித்த சந்தை தொகுதியின் இருகட்டடங்களை சீர் செய்து தருமாறு வியாபாரிகளும், பொது மக்களும் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-85)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் தென்கொரியா சென்றனர்

(கொழும்பு)

தென்கொரிய கைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் இலங்கையர் பற்றிய விபரங்களைக் கண்டறிவதற்காக அமைச்சர் டிலான் பெரேராவின் உத்தரவின் பேரில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினரகளான எரிக் வீரவர்தன, தாராணாத் பசநாயக்கா, ஷெணான் சேமசிங்க, கனக ஹேரத் உதித லொக்கு பண்டார, ஷாமிக்க புத்ததாச ஆகியோர் இந்த விஜயத்தில் பங்கு கொண்டனர்.

தென்கொரியாவிலுள்ள இலங்கைத் தூது வர் திஸ்ஸ விஜேரத்ன உட்பட அங்குள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் இந்த விஜயத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

சியோல் நகரிலுள்ள பல தொழிற்சாலை களை எம்.பி.க்கள் பார்வையிட்டனர். இலங்கையர்கள் முயற்சியு டனும் திறமையாகவும் வேலை செய்வதாக இத் தொழிறசாலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர். எனவே கூடுதலான இலங்கையர்களை தொழிலுக்காக பெற்றுக் கொள்ள தாம் விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இத் தொழிற்சாலைகளில் வேலை செய் யும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உச்ச வசதிகளையும் பார்வையிட்ட எம்.பி.ககள் அதற்காக இலங்கையின் பாராட்டையும தெரிவித்தனர்.

தொழிற்சாலை உரிமையாளர்கள் ஊழியரகளுக்கு வழங்கியுள்ள வசதி, சேவைகள் தொடர்பாக பாராட்டி எம்.பி.க்கள் அவர்களுக்குச் சான்றிதழ் களையும் வழங்கினர். (2)

# இராசி பலன்

**10.05.2014**
**(சித்திரை 27, சனிக்கிழமை)**
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.44 மணிவரை
உத்தரம் பின்னிரவு 5.33 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
சுபநேரம் 2.54-4.24 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**மீனம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மேடம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**இடபம்** கனவுகள் நனவாகக் கண்ணனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும். திருடர் பயமுண்டு.

**கடகம்** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள், நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும், சுப செய்திகள் இல்லம் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், அந்நிய தேசத் தொடர்புகள் நன்மை தரும், செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், சேமிப்பு [illegible] மேலோங்கும்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், தொழில் நன்மை கருதிய பயணமொன்று ஏற்படலாம், சயன [illegible] குறைவான நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச.ச.நிலையங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகள் கிடைக்கப்பெறவில்லை

## சமாச ஒன்றிணைப்புத் தலைவர்கள் விசனம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு கிடைக்கவேண்டிய நன்கொடையானது கடந்த 3 வருடங்களாக கிடைக்கப்பெறவில்லையென சனசமூக நிலைய சமாச ஒன்றிணைப்பு தலைவர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குள் 87 சனசமூக நிலையங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.


இச்சனசமூக நிலையங்களுக்கு கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து உள்ளூராட்சி திணைக்களங்களினால் எந்தவித நன்கொடைகளும் கிடைக்கப்பெறவில்லை.

இதனால் குறித்த சனசமூக நிலையங்கள் தமது சேவையினை முன்னெடுத்து செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

இது தொடர்பாக இற்றைவரை உள்ளூராட்சி திணைக்களங்களோ பிரதேச சபைகளோ எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

எனவே குறித்த சனசமூக நிலையங்களுக்கு கிடைக்க வேண்டிய நன்கொடையானது இந்த வருடத்திலாவது கிடைக்கவேண்டுமென சனசமூக நிலையங்களின் சமாச ஒன்றிணைப்பு தலைவர்களினால் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-60)

நன்றி: மிரர்



# திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறும்.

இச்சிலையினை அதிபர் வே.கா. கணபதிபிள்ளை திறந்து வைக்கவுள்ளார்.

இச்சிலையானது சிற்பி கலாபூஷணம் செ.சிவப்பிரகாசத்தினால் செதுக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்விற்கு அனைத்து விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(2)




# தமிழ் புத்திஜீவிகளை வெளியேற்றுவது அடக்கு முறையாளர்களின் நோக்கம்

## யாழ்.பல்கலை.ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அச்சுறுத்தல்கள் மூலம் தமிழ் புத்திஜீவிகளை வெளியேற்றுவதே அடக்குமுறையாளர்களின் நோக்கமாகும் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்.பல்கலையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்கலை. ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் கலாநிதி ஜி.திருக்குமரன் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் ஆசிரியர்கள் சார்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு காரணம் என்னவென்றால், நீண்டகாலமாக அதாவது 10 வருடங்களுக்கு மேலாகவே அடிக்கடி கொலை அச்சுறுத்தல்கள் மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் விடுக்கப்பட்டு வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக கடந்த வாரமும் சில மாணவ தலைவர்களிற்கும் பேராசியர்களிற்கும் பீடாதிபதிகளிற்கும் துண்டுப்பிரசுரம் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

உண்மையிலே இந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக பல மொழிகளினைத் தாங்கி எல்லா கலாசார மாணவர்களையும் இணைத்து சீராக இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஒரு பல்கலைக்கழகமாகும்.

யாழ் பல்கலைக்கழகம் தன்னுடைய கல்வி நடவடிக்கைகளிலும் ஆராய்ச்சி நட வடிக்கைகளிலும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் இவ்வாறான கொலை அச்சுறுத்தல்கள் மாணவர்களினதும் பேராசிரியர்களினதும் மன நிலையினை பாதிக்கச் செய்யும்.

இவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் மன அழுத்தங்களுக்குள்ளாக்கி அவர்களுடைய ஆற்றல்களினையும் குழப்புவதாக அமைகின்றது.

இது எங்களுடைய மன நிலைகளினையும் குழப்பி எமது ஆக்கபூர்வமான கல்வி செயற்பாடுகளினையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ள முடியாத நிலையில் நாங்கள் உள்ளோம்.

இவ்வாறான அச்சுறுத்தல் செயற்பாடுகள் யார் செய்தனர் என்று தெரியாத நிலையில் தான் அவர் களுக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாக இவ் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத் துள்ளோம்.

இவ்வாறான செயற்பாடுகளால் எவ்வித பிரயோசனமும் இல்லை. நாம் சட்டத்திற்கு புறம்பாக நடந் திருந்தால் சட்டத்தின்படி எம்மீது நடவடிக்கையெடுங்கள்.

நாம் சட்டத்திற்கு எதிராகவோ அல்லது நீதிக்கு புறம்பாகவோ எதுவும் செய்யாமல் விட்டதால் தான் இவர்கள் இந்தவிதமான கீழ்த்தரமான துண்டுப்பிரசுர கலாசாரத்தின் மூலம் கொலை அச்சுறுத்தல்விடுத்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகம் தனது கற்றல் நடவடிக்கைகளிலும் ஆராய்ச்சி நடவடிக்கைளிலும் தொடர்ந்து சீராக இயங்குவதற்கு அனைத்து இன மாணவர்களிடமும் விரோத மனப்பாங்குகளினை ஏற்படுத்த வேண்டாம்.

இதில் சம்பந்தப்பட்ட யாராக இருந்தும் தவறு விட்டிருந்தால் சட்ட பூர்வமாக அணுகும் படியும் அநீதியான முறையில் செயற்பட்டிருந்தால் எம்மிடம் நேரடியாக அணு கும் படியும் நாம் கூறுகின்றோம்.

தொடர்ந்தும் இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகள் இடம் பெறாதிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையெடுக்க வேண்டும்.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் தொடருமாகவிருந்தால் புத்திஜீவிகள் வெளியேற்றம் இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். ஏற்கனவே பல பேராசிரியர்கள் அச்சுறுத்தல்களிற்கு பயந்து வெளியேறியுள்ளனர் என்றார் அவர். (2-4)

# சிறுகதை பிரிவில் பரிசு பெற்றார்



அளவெட்டி மத்தியைச் சேர்ந்த நடராசா சிறிஸ்கந்தராசா கலை, கலாசார அமைச்சு நடத்திய 2013 ஆம் ஆண்டுக்கான கலை இலக்கியப் போட்டியில் சிறுகதைப் பிரிவில் (வாழ்க்கை ஒரு வட்டம்) பிரதேச செயலகப் பிரிவில் முதலாம் இடத்தையும் மாவட்ட ரீதியில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் ஏற்கனவே சிறுகதை, பாடலாக்கம் ஆகியவற்றில் தேசிய மட்டத்திலும் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதியை புனரமைக்குக

(பொற்பதி)

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதி மற்றும் அம்பன் என்ற கிராமத்திற்கு செல்லும் வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியூடாக 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தினமும் பயணிக்கின்றனர். அத்துடன் பத்துக்கும் மேற்பட்ட அரச, தனி யார் பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இதனை விட இந்த வீதியை மையமாக கொண்டு பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச சபையில் இரண்டு உப அலுவலகங்கள், இரண்டு அரச வைத்தியசாலைகள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கடற் றொழில் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம் மற்றும் எட்டு பாட சாலைகள் என்பன காணப்படுகி ன்றன.

இவற்றுக்கு மேலாக வடமராட்சி கிழக்கு வாழ்வாதாரத்தின் தொழிலாகிய கடற்றொழில் மையக் கிராமமான தாழையடி மருதங்கேணிக்கு இவ் வீதி ஊடாகவே பெருமளவு கூலர் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் பூர்த்தியான இவ் வீதியை திருத்தித் தருமாறு கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள் மற்றும் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான பிரதேச செயலகத்தில் ஒருங்கி ணைப்பு கூட்டத் தில் வாய் மொழி மூலமும் எழுத்து மூலமாக அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபை தலைவர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கைவிடுத்தனர்.

ஆனால் இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே குறித்த வீதியில் சீரான போக்குவரத்து மேற்கொள்ளும் வகையில் திருத்தித் தருமாறு பொது மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-64)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



அளவெட்டியைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் வ.மருதலிங்கம் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் சமாதான நீதவா னாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் செயலாளராவார். (அ)



கொமர்ஷல் வங்கியின் மானிப்பாய் கிளையின் வருடாந்த அருணலு பரிசளிப்பு விழா அண்மையில் வங்கிக் கிளையின் முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறுமிகளின் வரவேற்பு நடனத்தினையும் பரிசில் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் பின்னரான 5 ஆண்டுகளில் மூன்றரை பில்லியன் அமெ.டொலர் செலவு

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

போரின் பின்னரான கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகளையும் உட்கட்டுமான வசதிகளையும் அதிகரிக்கும் நோக்கில் மூன்றரை பில்லியன் அமெரிக்கன் டொலர் செலவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவால் கப்ரால் தெரிவித்துள்ளார்.

வடமாகணத்தின் அபிவிருத்திக்காக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊகுவித்தல் என்னும் தொனிப்பொருளில் வடமாகாண மத்திய வங்கி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுமக்கள் கலந்துரையாடல் ஒன்று யாழ். மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள கற்றன் நஷனல் வங்கியின் தலைமை காரியாலயத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவால் கப்ரால் உரையாற்றும் போது மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணம் முன்பு பின்தங்கிய ஒரு மாகாணமாக இருந்தது. ஆனால் இன்று அவ்வாறு இல்லாது இலங்கையின் முதுகெலும்பாக மாறியுள்ளது. இவ்வாறான நிலைமைக்கு வடமாகாணம் உருவாவதற்கு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலே பிரதான காரணம்.

எந்தவொரு நாட்டிலும் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகள் பின்தங்கித்தான் உள்ளது. ஆனால் எந்தவொரு நாட்டினமும் முதுகெலும்பாகவுள்ளதும் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகள்தான். அதற்கு இலங்கை ஒன்றும் விதிவிலக்கல்ல, இருப்பினும் மத்திய வங்கி இவ்வாறான வர்த்தகம் சார்ந்தவர்களை இனங்கண்டு ஊக்குவிக்கவுள்ளது.

எனக்கு முன்பு உரையாற்றிய பேராசிரியர் மிகுந்தன் சொன்னது போன்று நாங்கள் விவசாயத்தில் மட்டுமல்லாது புதிய கைத்தொழில் உற்பத்தி முயற்சிகளை மேற்கொண்டு அவற்றை சந்தைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரததை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

பொதுவாக வடபகுதியில் உள்ள பனை வளத்தை கொண்டு உற்பத்தி செய்கின்ற பனம் பொருட்களின் உற்பத்தி தன்மையை அல்லது வடிவத்தை மாற்ற வேண்டும். ஏனென்றால் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களையும் உள்நாட்டு நுகர்வோரையும் கவரக்கூடிய வகையில் உற்பத்திசெய்ய வேண்டும்.

இலங்கையில் போரின் பின்னரான கடந்த 5 ஆண்டுகளில் பாரிய முதலீடு ஒன்றினை மேற்கொண்டுள்ளோம். அதாவது மூன்றரை பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்து நாடு முழுவதிற்குமான உட்கட்டமைப்பு வசதிகளை செய்துள்ளோம்.



ஆனால் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்திகள் போதாது உள்ளது. இவ்வாறு செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உரிய பலன் கிடைக்க வேண்டும் என்றால் உற்பத்தியினை பெருக்கி அதன் மூலமான வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

மேலும்இலங்கை மத்திய வங்கி தன்னுடைய நோக்கத்தை மாற்றியுள்ளது,


பிரதேச ரீதியான கைத்தொழில் அபிவிருத்தியை எவ்வாறு அதிகரிக்கலாம், அதனை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ் நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் மற்றும் பேராசியர் மிகுந்தன், மத்திய வங்கியின் உயரதிகாரிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-6)

# பயங்கரவாத நிதி கொடுக்கல் வாங்கல் குறித்து விளக்கம்

## நியூசிலாந்துக்கு பீரிஸ் எடுத்துரைப்பு

பயங்கரவாத நிதி கொடுக்கல்-வாங்கல் தொடர்பில் இலங்கை அரசாங்கம், நியூசிலாந்திற்கு விளக்கம் அளித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிக் கொடுக்கல்-வாங்கல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் குறித்து இலங்கை வெளி விவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் விளக்கியுள்ளார்.



அமைச்சர் பீரிஸ் அவுஸ்திரேலியாவிற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு தற்போது நியூசிலாந்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரேமுக்குலேவிடம், அமைச்சர் பீரிஸ் விளக்கியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனிதவுஉரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு நியூசிலாந்து இணை அனுசரணை வழங்காமை வரவேற்கப்பட வேண்டியது என அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ, பங்கேற்றிருந்தமைக்கு நன்றி பாராட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பின்னர் அண்மையில் புலம்பெயர்ந்த அமைப்புகள் மற்றும் தனியாட்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விடுத்திருந்த தடை குறித்தும் அவரால் விளக்கமளிக்கப்பட்டது. (2)

# புதிய பொலிஸ் பிரிவை நீக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

மத விவகாரங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட புதிய பொலிஸ் பிரிவை நீக்குவது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக அரசாங்கம அறிவித்துள்ளது.

அரசாங்கப்பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் பிரிவை அகற்றிக் கொள்ளுமாறு ராவணாபலய அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்யப்படும். இந்தப் பிரச்சினை குறித்து அரசாங்கம் ஒரு கோணத்தில் பார்த்து தீர்மானம் எடுத்துள்ளது.

ஏனைய கோணங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். ராவணா பலய அமைப்பின் கோரிக்கை குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கத் தயார் என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (2)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 21.5 செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ்)<br>தொ.இ: B/1360 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 15 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/1951 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: 48 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MA, BBA / வங்கியாளர்<br>தொ.இ: B/1361 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 66 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1953 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 68 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் O/L (பிரான்ஸ்-Not PR)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/1367 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 28.5<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / பாமசி<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்களும ஏற்கப்படும், வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/1955 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் -2<br>கி.பா: 13<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, Hard ware Engineering / கணனி பழுதுபார்த்தல் வியாபாரம்<br>தொ.இ: B/1369 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1959 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பீகார் மாநிலத்தில் கோபால்கஞ்ச் பகுதியில், காங்., துணை தலைவர் ராகுல் பிரசாரம் செய்ய வந்த போது, அத் தொகுதி வேட்பாளர் ஜோதிகுமாரிக்கும், ராகுலுக்கும் சேர்த்து மாலை அணிவித்த தொண்டர்கள்...

# செவ்வாயில் குடியேற 44 இந்தியர்கள் தெரிவு




நெதர்லாந்தைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் மார்ஸ் ஒன், 2024 ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியேற்றப் போவதாகவும், அந்த திட்டத்தில் சேர விரும்பும் நபர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க கடந்த ஆண்டு அழைப்பு விடுத்தது.

ஒருமுறை மட்டுமே பயணம் செய்ய உள்ள இத்திட்டத்துக்கு, உலகம் முழுவதும் 140 நாடுகளில் இருந்து விண்ணப்பங்கள் குவிந்தன.


மொத்தம் 2 இலட்சம் பேருக்கு மேல் விண்ணப்பித்திருந்த இதற்கு இந்தியாவில் இருந்து 20 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்திருந்தனர்.

கடந்த 2013, டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற முதல் கட்ட தேர்வில் 62 இந்தியர்கள் உட்பட ஆயிரத்து 58 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவர்களுக்கு தகுதிச் சோதனை நடத்தப்பட்டது. இந்த இரண்டாம் கட்ட தேர்வுச் சுற்றில் 353 பேர் நீக்கப்பட்டு 44 இந்தியர்கள் உட்பட 705 பேரை இந்த நிறுவனம் தேர்வு செய்துள்ளது. இந்த 44 இந்தியர்களில் 17 பேர் பெண்கள்.

இந்த 705 பேரில் 418 ஆண்கள், 287 பெண்கள் உள்ளனர்.

# சென்னை விமான நிலையத்தில் மர்ம பைகளால் பரபரப்பு



(ஆலந்தூர்)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய உளவுத்துறையினர் தகவல் கொடுத்து உள்ளனர்.

இதையடுத்து சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கடந்த 3 நாட்களாக விமான நிலையத்தில் பயணிகள் விட்டுச்செல்லும் பைகளால் பரபரப்பு ஏற்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் காலை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தின் புறப்பாடு பகுதியில் நீண்ட நேரமாக 2 பைகள் கேட்பாரற்ற நிலையில் கிடந்தன.

அதை கண்ட விமான நிலைய ஊழியர்கள், வெடிகுண்டு இருக்குமோ? என்று பீதி அடைந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் விமான நிலைய வெடிகுண்டு நிபுணர்கள் சம்பவ இடத்துக்கு மோப்ப நாயுடன் வந்தனர்.

அவர்கள் அந்த பைகளை சோதனை செய்தபோது அதில் வெடிகுண்டு எதுவும் இல்லை என கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பிறகே அங்கிருந்தவர்கள் நிம்மதி அடைந்தனர்.

பின்னர் அந்த பைகளை பிரித்து சோதனை செய்தபோது அதில் துணிகள், எண்ணெய் டின், தண்ணீர் போத்தல்கள் இருந்தன.

யாரோ பயணி ஒருவர்தான் அந்த பைகளை தவற விட்டுச் சென்று இருக்க வேண்டும் என தெரியவந்தது.

இதையடுத்து அந்த 2 பைகளையும் விமான நிலைய மேலாளரிடம் ஒப்படைத்தனர்.

இந்த சம்பவத்தால் விமான நிலையத்தில் ஒரு மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணைக்கு தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு

(புதுடில்லி)

தமிழக முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா உள்ளிட்டோருக்கு எதிராக பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இது தொடர்பாக சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லெக்ஸ் புராப்பர்டி டெவலப்மென்ட் என்ற தனியார் நிறுவனம் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ் செஹான், ஜே. செலமேஸ்வர், எம்.ஒய். இக்பால் அடங்கிய அமர்வு விசாரித்தது.

அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் முகுல் ரோத்தகி, ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் எங்கள் நிறுவன சொத்து முடக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பானவழக்குசென்னை சிவில் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, பின்னர் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.



ஆனால், அந்த நீதிமன்றம் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் கொண்டதாகும்.

எங்கள் நிறுவன சொத்து முடக்கம் தொடர்பான வழக்கை கிரிமினல் வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் எவ்வாறு விசாரிக்க முடியும்? எனவே, சொத்து முடக்கப்பட்ட வழக்கை எந்த நீதிமன்றம் விசாரிப்பது என்பதை முதலில் விசாரிக்க வேண்டும்.

அதுவரை ஜெயலலிதா உள்ளிட்டோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, அவரது கோரிக்கையை ஏற்கக் கூடாது. லெக்ஸ் புராப்பர்டி டெவலப்மென்ட் தொடர்பான வழக்கும் ஜெயலலிதா உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கும் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்திலேயே தனித் தனியாக நடைபெறட்டும். அதில் எந்த பிரச்சினையும் இல்லை என்று அரசு சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சித்தார்த் லூத்ரா தெரிவித்தார்.

# ஜல்லிக்கட்டிற்கு தடைவிதித்திருப்பது ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் தருகிறது

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

(சென்னை)

தமிழர்களின் வீர விளையாட்டாகவும், பண்பாட்டு அடையாளமாகவும் பார்க்கப்படும் ஏறுதழுவல் (ஜல்லிக்கட்டு) போட்டிக்கு தடை விதித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இந்தப் போட்டியை ஒழுங்குபடுத்துவதற்காக தமிழக அரசு இயற்றிய சட்டத்தையும் செல்லாது என நீதிபதிகள் கூறியுள்ளனர்.

ஏறுதழுவல் போட்டியின் நோக்கத்தை உணராமல் உச்சநீதிமன்றம் அளித்த இத்தீர்ப்பு வருத்தமளிக்கிறது.

தமிழ்நாட்டில் ஏறுதழுவல் போட்டி இப்போது திடீரென நடத்தப்படவில்லை. பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட சங்க இலக்கியங்களிலேயே ஏறுதழுவல் போட்டி குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன.

வீரத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக கருதப்படும் இந்தப் போட்டிகளால் காளைகளுக்கோ அல்லது அவற்றை அடக்க முயலும் காளையருக்கோ எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை.

காலப்போக்கில் பேராசை கொண்ட சிலர், காளைகளின் வாயில் மது ஊற்றுதல், கண்களில் மிளகாய்பொடி தூவுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாற்றுகள் எழுந்தன. இயற்கைக்கு எதிரான இந்த செயற்பாடுகள் கடுமையாக கண்டிக்கத்தக்கவை, தடுக்கப்பட வேண்டியவை என்பதில் ஐயமில்லை.

இந்த அம்சங்களையும், ஏறுதழுவல் தொடர்பான வழக்கில் ஏற்கனவே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளின் அம்சங்களையும் கருத்தில் கொண்டு தான் ஏறுதழுவல் ஒழுங்குமுறை சட்டம்



தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், இதையெல்லாம் உணராமல் ஏறுதழுவல் போட்டிக்கு எதிரான சில குற்றச்சாட்டுக்களை மட்டும் மேலோட்டமாக பார்த்து விட்டு அப்போட்டிக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்திருப்பது மிகப்பெரிய ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது என ராமதாஸ் தெரிவித்துள்ளார்.




# பான் கீ மூனுடன் இத்தாலிய அதிகாரிகள் சந்தித்து பேச்சு

(நியூயோர்க்)

இத்தாலி சென்றுள்ள ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனை தலைநகர் ரோமில் அந்நாட்டு அதிகாரிகள் கடந்த புதன்கிழமை சந் தித்துப் பேசினர்.

அப்போது, இந்திய மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் இந்தியாவில் விசாரணையை சந்தித்துவரும் இத்தாலி கடற்படை வீரர்கள் குறித்து அவர்கள் பேசியதாக பான் கீ மூனின் உதவி செய்தித் தொடர்பாளர் வானியா மேஸ்ட்ராக்கி தெரிவித்தார்.

இருப்பினும், அந்த ஆலோசனை குறித்த விபரங்கள் எதையும் அவர் கூறவில்லை.

இதனிடையே, இத்தாலி ஜனாதிபதி . ஜார்ஜியா நெப்பாலிடானோவை பான் கீ மூன் சந்தித்துப் பேசினார்.

கேரள கடற்பகுதியில் 2012 ஆம் ஆண்டு இத்தாலிய கடற்படையினர் இருவரால் இந்திய மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ்வழக்கு விசாரணைக்காக இத்தாலிய கடற்படையினர் இருவரும் டில்லியில் உள்ள அந்நாட்டு தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டினை கைப்பற்றி தமிழீழ நாடாக மாற்ற த.தே.கூட்டமைப்பினர் முயற்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

**தனித்தமிழீழத்தினை உருவாக்கும் நோக்கம் போய் முழுநாட்டினையும் கைப்பற்றும் சிந்தனை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு ஏற்பட்டுவிட்டது. எதிர்க்கட்சி ஆட்சியமைத்தால் தீவிர வாதம் வலுப் பெறும் சிங்கள மக்களின் கையிலேயே ஆட்சி மாற்றம் உள்ளது. இதனை தமிழர் பிரதி நிதிகள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் எனதேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித் துள்ளது.**

ஜனாதிபதி தேர்தலின் போது பொது வேட்பாளராக விக்னேஸ் வரனை நியமிப்பது தொடர்பில் எழு ந்துள்ள கருத்து தொடர்பில் வின வியபோதே அவ் இயக்கத்தின் தலை வர் குணதாச அமரசேகர மேற் கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் வடக்கு கிழக்கினை பிரித்து தனித் தமிழீ ழத்தினை உருவாக்கும் எண்ணமே தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கின்றது என நினைத்துக் கொண்டுள்ளோம். ஆனால், அவர்கள் முழு நாட்டினையும் கைப்பற்றி தமிழீழ நாடாக மாற்றவே திட்டம் தீட்டுகின்றனர். விக்னேஸ்வரனை பொது வேட்பாளராக நிறுத்தி தேர் தலில் வெற்றி பெறச் செய்ய முடி யுமா? அவ்வாறு வெற்றி பெற சிங்கள மக்கள் ஒருபோதும் ஆதரிக கமாட்டார்கள்.

இந்த நாட்டில் சிங்கள மக்களே ஜனாதிபதியை தெரிவு செய்கின் றனர். அவர்களின் கையிலேயே ஆட்சி மாற்றம் தங்கியிருக்கிறது. இப்படி இருக்கையில் தமிழ் பிரதி நிதிகளால் ஒரு போதும் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தவோ ஜனா திபதியாக தெரிவாகவோ முடியாது.

மேலும், எதிர்க்கட்சியே விடு தலைப்புலிகளுடன் ஒப்பந்தங் களை மேற்கொண்டு நாட்டில் தீவிரவாதத்தினை வளர்த்து விட் டது. அவர்களினால்தான் இராணுவ வீரர்களும், அப்பாவி பொதுமக்க ளும் கொல்லப்பட்டனர். இப்போது மீண்டும் சர்வதேச அளவில் சென்று நாட்டிற்குள் தீவிரவாதத்தினை கொண்டுவரவே எத்தனித்துக் கொண்டு இருக்கின்றனர். எதிர்க் கட்சி ஆட்சியமைக்குமானால் நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாக்கப்படும். அது மட்டுமன்றி சர்வதேச தலையீடுகள் நாட்டில் ஏற்பட்டு நாடு முழுமையான சர்வ தேச கட்டுப்பாட்டினுள் வந்துவிடும். இதனை ஏற்படுத்தவே எதிர்க்கட்சி மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமை பபு மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து சர் வதேசத்துடன் கைகோர்த்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (2)

# அரசாங்கம் பற்றி வெளியே விமர்சனம் செய்யவேண்டாம்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

அரசாங்கம் பற்றி வெளியே விமர்சனம் செய்ய வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன்அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு அலரி மாளிகை யில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் சட்ட மூலங்கள் மற்றும்வேறு நிர்வாக விடயங்கள்தொட ர்பில் கருத்து முரண்பாடு இருந் தால் நேரடியாக சொல்ல வேண்டும்.

பின்னால் சென்று வெவ்வேறு இடங்களில் சொல்வதில் பயனி ல்லை. அமைச்சரவை அல்லது நாடா ளுமன்றக்குழுக் கூட்டங்க ளில்இது குறித்து அறிவிக்க முடியும்.

வெளிநாடுகளில் சென்று அரசா ங்கத்தின் நிர்வாக விவகாரங் களை ஆளும் கட்சியினர் பேசுவது பொருத்தமாகாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (2)

# ஜேம்ஸ் பெக்கரின் கசினோ முதலீடு இலங்கைக்கு சவால்

## அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டு

அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் பெக்கரின் முதலீடு, இலங்கையின் கலாசாரம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றுக்கு சவாலாகவுள்ள தாக அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது பல கசினோ வர்த்தகங்கள்இயங்குகின்றன.

இந்நிலையில் பாரியளவான கசினோ வர்த்தகம் அவசியம் இல்லை என்று அவர் தெரிவி த்துள்ளார்.

ஜேம்ஸ் பெக்கரின், முதலீடு காரணமாக பாரிய வரிச்சலுகை ஒன்றை இலங்கை அரசாங்கம் செலுத்தவேண்டியிருக்கும். அத்து டன் இந்த கசினோ விளையாட்டு நாட்டை சீரழித்து விடும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அழிவுக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட ஆகியோரே ஜேம்ஸ் பெக்கரை இலங்கைக்கு அழைத்து வந்தனர் என்றும் அமைச்சர் கூறினார்.(2)

# ஜேர்மனிய அரசியல் யாப்பை உருவாக்க ஐ.தே.கட்சி முயற்சி

இலங்கையில் ஜேர்மன் நாட்டின அரசியல் யாப்பை ஒத்த வகை யி லான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்க மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் உயர்ம ட்ட தகவல் ஒன்று உறுதிப்படுத்தி யுள்ளது.

இதன்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்மரசிங்கவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பா ளராக போட்டியிடுவார்.

முன்னதாக அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்திருந்தார். எனி னும் அமெரிக்கா வழங்கியுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய ரணில் விக்ரமசிங்கவே ஜனாதிபதி தேர் தலில் போட்டியிட முடிவு செய்தி ருப்பதாக தகவல்கள் தெரிவிக்கி ன்றன.

இதன்பொருட்டே தற்போது அவர் அமெரிக்கா சென்று ஆய்வு களை மேற்கொண்டு வருகிறார்.

அவர் ஜனாதிபதியாக தெரிவா னால், உடனடியாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்து செய்து, பாரா ளுமன்றத்துக்கு பதில் கூறும் வகையிலான ஜனாதிபதி முறை ஒன்றை கொண்டு வருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# பொலிஸ் உத்தியோகத்தருக்கு மிரட்டல் விடுத்த இருவர் கைது

(கொழும்பு)

பெண் பொலிஸ் உத்தியோக த்தரை கடுமையான வார்த்தை களைக் கூறி மிரட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆணமடு - நவத்தேகம வீதி யின் மருங்கொட பிரதேசத்தில் வைத்தே குறித்த சந்தேகநபர்களால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

பணி முடித்து பிறதொரு பொலிஸ உத்தியோகத்தருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, அந்தப் பகுதியால் மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர்கள் மிரட்டல் விடுத்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் ஆணமடு பொலி ஸாருக்கு தெரியப்படுத்தியதையடு த்து சந்தேகநபர்கள் கைதாகியுள் ளனர்.

இவர்களில் ஒருவர் நவத்தேகம பிரதேச செயலாளர் அலுவலகத்தி லும் மற்றையவர் இலங்கை போக்கு வரத்துச் சபையின் புத்தளம் டிப்போ விலும் பணி புரிபவர்கள் என பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசாரணை களில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் புத்தளம் மாவ ட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வுள்ளனர். (2)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 80 |
| தக்காளி | 100 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 40 | 60 |
| கரட் | 80 | 80 | 100 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 25-35 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 40 | 60 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 60-90 | 150 | 120 |
| போஞ்சி | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | – |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-40 | 40 | 30-35 |
| இராசவள்ளி | 80 | 100 | 70 |

# (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 09

facebook

தீபன் பிரதீபன்




சிந்து சிந்துஜா



விஷாக்கா விஜயன்




Like.Comment... Like

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

801

## புத்திசாலி ராணி


...“நாட்டில் முக்கிய உணவு தானியங்களின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அதனால் உணவுப் பொருட்கள் மிக அதிக விலையில் விற்கப்படுகின்றன.

ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

பதைத் துப்பறிய, கௌசல்யா தன் ஒற்றர்களை அனுப்பி வைத்தாள்.

வியாபாரிகளின் வீட்டிலும், அவர்களுடைய உறவினர்களின் வீட்டிலும் சோதனையிட்டும் அங்கு அவர்களால் தானியங்களைக் காண முடியவில்லை.



இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்று கவலையுடன் இருக்கிறேன்” என்றார் மன்னர்.

“இந்த ஆண்டு திடீரென ஏற்பட்டுள்ள பற்றாக் குறைக்குக்காரணம்கண்டு பிடித்தீர்களா?” என்று கௌசல்யா கேட்டாள்.

“அதற்கான காரணத்தை நானும் மந்திரிகளும் நீண்ட நேரம் ஆலோசனை செய்தும் கண்டு பிடிக்க முடியவில்லை!” என்றார் மன்னர்.

“காரணம் கண்டுபிடிக்க முடியவில்லையா?” சரி, கடந்த ஆண்டு வயல்களில் விளைச்சல் குறைவாக இருந்திருக்கலாம்! அதைப்பற்றிய விவரங்கள் தெரியுமா?” என்றாள.

“கடந்த சில ஆண்டுகளில் விளைச்சல் சிறப்பாகவே இருந்து வருகிறது” என்றார் மன்னர்.

“அப்படியானால், வியாபாரிகள் தானியங்களைப் பதுக்கி வைத்துள்ளனர் என்று தெரிகிறது.

வியாபாரிகளின் தானியக்கிடங்குகளைசோதனை செய்தீர்களா?” என்று ராணிகேட்க, “செய்தோம்! அவர்கள் பதுக்கி வைத்திருப்பதாகவும் தெரியவில்லை” என்றார் மன்னர்.

“அப்படியா? சரி இந்தப் பிரச்சினையை என்னிடம் விட்டு விடுங்கள்! நான் பார்த்துக் கொள்கிறேன்!” என்றாள்.

பிறகு, ராஜ்யத்தில் தானியங்கள் எங்கே பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்

ஒருநாள், தலைநகரின் மிகப் பெரிய இரண்டு சத்திரங்களில் தங்குவதற்கு இடம் கிடைப்பதில்லை என்று சில பயணிகள் கொடுத்த புகார் ராணியின் கவனத்தை சுண்டியிழுத்தது.

அந்த சத்திரங்களை நிர்வகித்து வந்தவர்கள் கமலா, விமலா என்ற இரண்டு பெண்கள்.

ஏராளமான அறைகளைக் கொண்ட சத்திரங்களில் திடீரென பயணிகள் தங்க இடமில்லாமல் போனது ஏன் என்ற சந்தேகம் ராணிக்குத் தோன்ற, உடனே தன் ஒற்றர்களை அங்கு அனுப்பி ரகசியமாக சோதனையிடச் சொன்னாள்.

அவள் எதிர்பார்த்தபடியே, பல அறைகளில் தானியங்கள் பதுக்கப்பட்டிருந்தன.

தங்கள் கிடங்குகளிலோ, வீடுகளிலோ பதுக்கி வைத்தால் பிடிபடுவோம் என்று எண்ணிய வியாபாரிகள் கமலா, விமலா ஆகிய இருவருடனும் ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு தங்கள் தானியங்களை சத்திரத்து அறைகளில் பதுக்கி வைத்திருந்தனர்.

உடனே ராணி அதிரடி நடவடிக்கையில் இறங்கினாள்.

மறுநாள், காவலர்கள் கமலாவிடம் வந்து “உன்னை மகாராணி அழைத்து வரச் சொன்னார்கள்!” என்று கட்டளை இட்டு அவளை அழைத்துச் சென்றனர்.

பயந்து நடுங்கிக் கொண்டே சென்ற கமலா, அன்று மாலைதான் சத்திரத்திற்குத் திரும்பினாள்.

கமலாவை ராணி ஏன் அரண்மனைக்கு வரச் சொன்னாள் என்ற ரகசியத்தை அறிந்து கொள்ளாவிட்டால் விமலாவிற்குத் தலையே வெடித்து விடும் போல் இருந்தது.

கமலா வந்ததும் வராததுமாக, “என்ன விடயம், கமலா? மகாராணி உன்னை எதற்கு கூப்பிட்டனுப்பினாள்?” என்று விமலா கேட்க, கமலா சிரித்துக்கொண்டே. “ஒன்றுமில்லை! மகாராணியுடன் பேசிப் பொழுது போக்கத் தோழிகளே இல்லையாம்! அதனால் தான் என்னை அழைத்து வரச் சொன்னாள்.

(தொடரும்)

## 05.2014 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1503 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் கேமான் தீவுகளை அடைந்து அங்கிருந்த பெருந்தொகையான கடலாமைகளைக் கண்டு அத்தீவுக்கு லாஸ் டோர்ட்டுகஸ் எனப் பெயரிட்டார்.
- 1612 - ஷாஜகான் மன்னன் மும்தாஜ் மகாலைத் திருமணம் புரிந்தான்.
- 1768 - மூன்றாம் ஜோர்ஜ் மன்னனைப் பெரிதும் குறை கூறி ஜோன் வில்க்ஸ் என்பவர் எழுதிய கட்டுரையை அடுத்து அவர் சிறை பிடிக்கப்பட்டார். இதை அடுத்து லண்டனில் பெரும் கல வரம் மூண்டது.
- 1774 - பதினாறாம் லூயி பிரான்சின் மன்னனாக முடிசூடினான்.
- 1796 - ரஷ்யப் படைகள் தாகெஸ்தான் குடியரசின் டேர்பெண்ட் நகரை முற்றுகையிட்டனர்.
- 1796 - பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியில் ஆஸ்திரியப் படைகளுக்கெதிரான போரில் பெரும் வெற்றி பெற்றான். 2,000 ஆஸ்திரியர்கள் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1810 - ஆர்ஜெண்டீனாவின் தலைநகரான புவெனஸ் அயரெஸ் நகர மண்டபத்தை புரட்சியாளர்கள் கைப்பற்றினர்.
- 1857 - சிப்பாய்க் கிளர்ச்சி: இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் மீரட் என்ற இடத்தில் சிப்பாய்கள் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். இந்திய விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவர் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்கக் கூட்டுப் படைகளினால் ஜோர்ஜியாவில் கைப்பற்றப்பட்டார்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கக் கூட்டுப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தளபதியான வில்லியம் குவாண்ட்ரில் என்பவரை கென்டக்கி என்ற இடத்தில் தாக்கி படுகாயப்படுத்தினர். இவர் ஜூன் 6 இல் இறந்தார்.
- 1871 - பிரான்சுக்கும் புருசியாவுக்கும் இடையிலான போர் பிரான்ஸ் சரணடைந்ததுடன் முடிவுக்கு வந்தது.
- 1877 - ருமேனியா துருக்கியிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1908 - அன்னையர் தினம் முதன் முதலில் அமெரிக்காவில் மேற்கு வேர்ஜினியாவில் கொண்டாடப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் முதலாவது குண்டு இங்கிலாந்தில் கெண்ட் பகுதியில் வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய நாடுகளுக்குள் ஜேர்மனி ஊடுருவியது.
- 1940 - வின்ஸ்டன் சர்ச்சில் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் ஐஸ்லாந்தினுள் ஊடுருவியது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் வான்படையின் தாக்குதலில் லண்டனில் கீழவை நாடாளுமன்றம் (House of Commons) சேதத்துக்குள்ளாகியது.
- 1946 - ஜவகர்லால் நேரு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார்.
- 1979 - மைக்குரேனேசிய கூட்டாட்சி நாடுகள் சுயாட்சி பெற்றன.
- 1993 - தாய்லாந்தில் விளையாட்டுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் இடம்பெற்ற தீ விபத்தில் பெரும்பான்மையாக இளம் பெண்கள் அடங்கிய 188 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1994 - நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பினத் தலைவரானார்.

### பிறப்புக்கள்

- 1932 - கார்த்திகேசு சிவத்தம்பி, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 2011)
- 1938 - கோ. நம்மாழ்வார், இயற்கை ஆர்வலர் (இ. 2013)
- 1946 - பிருட்டே கால்டிகாசு, ஜேர்மனிய ஆய்வாளர்
- 1963 - ஆ. ராசா, இந்திய அரசியல்வாதி.

### இறப்புகள்

- 2003 - கோபி கிருஷ்ணன், எழுத்தாளர் (பி. 1945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...மலைக்கு நடுவே உள்ள பிளவில் முக்கோண வடிவில் ஒரு குகை. ஏற்கனவே வரும்போது கீழே குளித்த இடம் என்றாலும் அதற்கு இவ்வளவு முக்கியத்துவம் இருக்கும் என்று அப்போது நினைக்கவில்லை.

மேலேயிருந்து விழும் நீர்த்திரள் குகையின் வாயிலின் வழியே வழிந்து கொண்டிருந்தது. முக்கோண வடிவிலிருந்த அந்த குகைக்கு உள்ளேதான் கோரக்கர் காய கல்ப மூலிகைகளை மறைத்து வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதற்குச் சாட்சி சொல்வதுபோல் மருந்து அரைக்கப் பயன்படுத்தும் அகலமான பாறையொன்று குகையின் வாயிற்படியருகே காணப்படுகிறது.

குகைக்கு உள்ளே உள்ள ஒரு மேடையில் கோரக்கர் வழிபட்ட சிவலிங்கம் இருக்கிறதாம். குகைக்கு வெளிச்சமளிப்பதற்காக மேடைக்கு மேலே குகையில் குடையப்பட்ட பள்ளமொன்றில் பக்தர்கள் அகல் விளக்கு ஒன்றை ஏற்றி வைத்திருக்கின்றனராம். இருள் சூழந்த அந்தக் குகையில் தண்ணீருக்கு நடுவே இருக்கும் சிவலிங்கத்தை அந்த அகல் விளக்கின் ஒளியில் தரிசிப்பதுதான் சிறப்பாம். சில சமயங்களில் அபூர்வமாக சித்தர்களின் திருவடிவங்களும் இங்கு தென்படுவதுண்டாம்.

தண்ணீர் வழிந்தோடும் பாறையின் பக்கவாட்டில் கால் பதித்தவாறே குகையை நெருங்கினோம். ஆனால் குகைக்குள்ளிருந்து தண்ணீர் அதிக அளவில் வழிந்து கொண்டிருந்ததாலும், நீரின் வேகம் அதிகமிருந்ததாலும் அதன் உள்ளே செல்ல முடியவில்லை. ஆகவே வெளியே வந்து குகைக்கு எதிர்ப்புறத்தில் இருக்கும் பாறையில் சிரமப்பட்டு ஏறி குகையைத் தரிசித்தோம்.

கோரக்கர் காயகற்ப மூலிகைகளை மறைத்து வைக்க சரியான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்று சொல்லியவாறே கீழே இறங்கினோம்.


கோரக்கர் காலத்தில் ஒவ்வொரு அமாவாசையன்றும் சித்தர்களனைவரும் குகைக்கு எதிரே இருக்கும் வட்டப் பாறையில் தேன் கலந்த தினை மாவில் சிவலிங்கமொன்றை அமைத்து, அதற்குச் சிறப்பாகப் பூசைகள் செய்வார்களாம்.

இப்பொழுதும் சுந்தர மகாலிங்கச் சிவனடியார் திருக்கூட்டத்தார் இப் பூசையைத் தொடருகிறார்களாம். தினை மாவில் தேன் கலந்து லிங்கம் அமைத்து பூஜை செய்தபிறகு அத்தினை மாவையே இங்கும், சுந்தர மகாலிங்கர் சன்னதியிலும் பிரசாதமாக விநியோகித்து விடுவார்களாம்.

கோரக்கர் குகையில் சாமியம்மாவும் சுந்தர மகாலிங்கம் சன்னதியிலும் தினை மாவை பிரசாதமாகக் கொடுத்ததன் காரணம் இப்பொழுது புரிந்தது. சாமியம்மாவைச் சந்திக்க முடியாவிட்டாலும் கோரக்கரின் மூலிகைக் குகையையாவது தரிசிக்க முடிந்ததே என்ற திருப்தியுடன் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். பயணத்தின் இடையே திடீரென்று நாய் குரைக்கும் சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தோம்.

அப்பொழுதுதான் நாங்கள் பிலாவடி கருப்பர் சந்நிதியைக் கடந்து கொண்டிருப்பது தெரிந்தது. கருப்பருக்கு நன்றி சொல்லாமலேயே போகிறீர்களே என்று எங்களுக்கு நினைவூட்டுகிறாரோ?

எங்களைப் பாதுகாப்பாக மலைக்கும் வனத்துக்கும் அழைத்துச் சென்று சித்தர்களின் பாதம் பட்ட சுவடுகளையும், சதுரகிரியின் மகாலிங்கங்களையும் தரிசிக்கச் செய்த கருப்பண்ண சாமியை வணங்கி



சந்தன மகாலிங்கம்- சுந்தர மகாலிங்கம்-பிலாவடி கருப்பர்

## ஆன்மீகம் 117

நன்றி தெரிவித்துவிட்டு அடி வாரத்தை நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

இதுவரை எங்கள் பயணத்துக்கு துணையாய் வந்த கருப்பரின் பிரதிநிதி தன் வாலை ஆட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்ததோடு அவரது சன்னதியிலேயே நின்று விட்டது.

யாத்திரையின் முடிவு தரிசனம்தான். இந்தச் சதுரகிரியில் நாங்கள் மகாலிங்கங்களை மட்டுமா தரிசித்தோம், அவரை வழிபட்ட சித்தர்களின் புனிதத் தடயங்களையுமல்லவா ஸ்பரிசித்திருக்கிறோம்.

இந்தச் சதுரகிரி மலையில் நம் பாதங்கள் படுவதற்கு நாம் பெரும் புண்ணியமல்லவா செய்திருக்க வேண்டும். இந்தப் பேறு எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடுமா என்ன!

சித்தர்களின் அழைப்பும் ஆசீர்வாதமும் இருந்தால் மட்டுமே சதுரகிரிப் பயணம் சாத்தியமாகும். அவர்களின் ஆசீர்வாதத்தோடு இதன் வழியே உங்களை அழைத்துச் சென்று சதுரகிரியைத் தரிசனம் செய்ய வைத்திருக்கிறோம்.

புண்ணியத் தலங்களைப் பார்க்க முடியாவிட்டாலும் அவைகளைப் பார்த்தவர் கூறக் கேட்பது கூட ஒரு புண்ணியச் செயலாகத்தான் தேவாரத்திலும் கூறப்படுகிறது.

சதுரகிரியில் உறையும் சுந்தர மகாலிங்கரும் சந்தன மகாலிங்கரும் சித்தர் பெருமக்களும் எல்லா நலன்களையும் வழங்குவார்களாக. *(முற்றும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**36**

எனது கிராமத்து வாழ்க்கையில் என்னால் அதிகமாக நேசிக்கப்பட்ட அஃறிணை.

கொடைக்கானல் மலை.

என்னால் அதிகமாக நேசிக்கப்பட்ட உயர்திணை-

அண்ணன் சின்னராசு.

பந்தம்-

ஏதோ ஓர் இலக்கிய பந்தம்.

சொந்தம்-

சொல்லிக் கொடுத்து வராத சொந்தம்.

சோறு போட்டால் மட்டும் வருகிற சொந்தம் அல்ல; என் துன்பங்களைக் கூறு போட்டாலும் கூட நிற்கிற சொந்தம்.

அவர் வசதி படைத்தவரில்லை; ஆனால் சிந்தனையில் செல்வந்தர்.

பார்த்தவுடன் நேசிக்கத் தோன்றும் உருவமில்லை; ஆனால் பழகினால் பூசிக்கப்பட வேண்டிய மனிதர்.

அவர் விவசாயிகளில் ஓர் இலக்கியவாதி; இலக்கியவாதிகளில் ஒரு விவசாயி.

உழைப்பாளி வேறாகவும், இலக்கியவாதி வேறாகவும் ஜாதி பிரிக்கிறது சமூகம்.


உழைப்பாளி என்பவர் மொழியை, இலக்கியத்தை, விவாகரத்து செய்து விட்டவர் அல்லது விவாகமே செய்து கொள்ளாதவர் என்றும் இலக்கியவாதி என்பவர் கையில் அழுக்கு ஒட்டாமல் சமூகத்தைச் சலவை செய்பவரென்றும்- மோசமான மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களாகவும் ஆகி விட்டன.

அண்ணன் சின்னராசு அப்படியில்லை.

வெயில் வந்து விட்டால் அவர் விவசாயி; இருள் வந்து விட்டால் அவர் இலக்கியவாதி.

ஒரு தென்னங்கன்றுக்கும் இன்னொரு தென்னங்கன்றுக்கும் இருபத்திரண்டு அடி இடைவெளி என்பதும் அவருக்குத் தெரியும்.

திருத்தக்க தேவருக்கும் கம்பருக்கும் ஐந்து நூற்றாண்டு இடைவெளி




என்பதும் அவருக்குத் தெரியும்.

பச்சை மரத்தில் உட்கார்ந்திருக்கும் கிளியை மூக்கை வைத்து அடையாளம் காண்பது மாதிரி சின்ன வயதிலேயே என்னையும் ஓர் இலக்கியவாதியாய் எதைக் கண்டோ இனம் கண்டிருக்கிறார்.

எனது [illegible] பேச்சு அவ[illegible]

ஒருநாள் நூலகத்தில் அமைதி என்ற அறிவுப் பலகையைக் காயப்படுத்தாமல் அவர் தன்னை எனக்கு அறிமுகப் படுத்திக் கொண்டார்.

அதுதான் அந்தம் வரை தொடரவிருக்கும் எங்கள் பந்தத்தின் ஆதி.

எங்கள் கிராமத்தில் தீ மேல் நடந்து திராவிட இயக்கங்களை வளர்த்தவர்களில் அவரும் ஒருவர் என்பதும் அவர் மீது நான் கொண்ட காதல் நீள்வதற்குக் காரணமாயிருந்தது.

நீதிக் கட்சியிலிருந்து நிகழ்காலம் வரை அரிய செய்திகளை அள்ளிக் கொட்டுவார்.


திருக்குறளின் பொருள் அவருக்குத் தெரிந்திருந்தாலும் தனக்குத் தெரியாதது போலக் கேட்டு எனக்குத் தெரிகிறதா என்று சோதிப்பார்.

ஆறு மணிக்கு மேல் எங்கள் ஊர் பஸ் ஸ்டாண்டில் சாலை ஓரத்தில் ஒரு சபை கூட்டுவார்.

டி.கே.சி.படைத்த வட்டத் தொட்டி மாதிரி அங்கே ஒரு சதுரத் தொட்டி சமைப்பார்.

ஏழெட்டு இலக்கிய ஆர்வலர்கள் கூடுவர்.

வாகனங்களின் இரைச்சல், டீக் [illegible]ஓசைகள், மனிதர்களின் [illegible]ஒலிபெருக்கியின் உறுமல்



கள் இத்தனை சப்தங்களுக்கும் மத்தியில் எனது சங்கீதம் அங்கே அரங்கேறும்.

அண்ணாவின் பேச்சுகள், கலைஞரின் வசனங்கள், பாவேந்தர் பாடல்கள், கண்ணதாசன், சுரதா, கவிதைகள் ஒப்பிப்பேன்; உயிர் உருக ஒப்பிப்பேன்.

தமிழ்த்தேன் வழிய வழிய- வந்திருக்கும் கூட்டம் வண்டாகும்.

சர்ச்சை வரும்; சண்டை வரும்; தர்க்கம் வரும்; தகராறு வரும்.

பாவேந்தர் பற்றி சுரதா எழுதிய ஒரு கவிதையைச் சொல்லிய போது சின்னராசு அண்ணனுக்கும் எனக்கும் தீராத சர்ச்சை வந்துவிட்டது.

தடைநடையே அவர் எழுத்தில் இல்லை; வாழைத் தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு?

எப்படி இருக்கிறது உவமை? என்றேன்.... *(தொடரும்)*

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய சூழலுக்கிணைவான பசுமை தொழில்நுட்பங்கள்-3



மண்புழு உரம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

**மண்புழு திரவம்**

எமது தேவையை நாமே இனங் கண்டு பூர்த்தி செய்தாலேயொழிய இன்

பாதுகாக்க முடியும். எமது சூழலை மாசுபடுத்தும் காரணிகளைப் பற்றி நாம் தெரிந்து வைத்திரு க்கின்றோம். ஆனால் அவற் றுக்கான மாற் றீடுகளை நடை முறைபபடுத்த முடியாமலிருக்கின் றோம்.

இரசாயனங்களின் ஆட்சி மேலோங்கியிருக்கின்ற இக் காலகட்டத்தில் இரசாயனமின்றி பயிர்ச்செய்கையில்லை என்னும் நிலைமை வந்திருக்கின்றது.

இதன் மூலம் நாம் இரசாய னங்களின்றி எதுவும் செய்ய முடியாதென்ற நிலைமைக்குள் தள்ளப்பட் டிருக்கின்றோம்.

பயன்படுத்தும் வரைக்கும் அசேதன

அசேதன இரசாயனங்களை வகை தொகையின்றி பயன்படுத்திய நிலங்களில் எப்படி சேதன முறை விவசாயத்திற்குதவும் என விவாதித்திருக்கும் நிலையில் சேதன முறையில் முயற்சிக்க பல வாய்ப்புக்கள் இருக்கின்றன.

சேதன விவசாயத்திற்கு சேதனமுறை யில் உருவாக்கப்படும் பசளைகளையே இடவேண்டும். இதற்காக மண்புழு உரம், மண்புழு திரவம் மற்றும் மண்புழு தேநீர் என்பனவற்றை பயன்படுத்த முடியும்.

இதில் மண்புழு உரம் நிலத்திற்கு இடவும் மண்புழு திரவம் மற்றும் மண்புழு தேநீர் என்பன திரவப்பசளையாக இலை க்கும் விசிற முடியும்.

அசேதன கலவைகளுக்கு ஈடானதாக இத்திரவங்கள் இருப்பதுவும் இவற்றின்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-I

னொருவர் எமக்காக வந்து எதனையும் தரப்போவதில்லை செய்யப்போவது மில்லை. இது எமது மூதாதையர் அனுப வமூடாக கண்டு சொல்லிவைத்தது. ஆனால் நாம் எதனையும் அலட்டிக் கொள்ளாமல் எமது சூழலையும் பாது காக்க திராணியில்லாதவர்கள் போல ஏனோதானோ என வாழ்ந்து கொண்டி ருக்கின்றோம்.

வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதனை விட இந்த பூமிக்கு பாரமாக இருக்கின்றோம் என்பது பொருத்தமான தாயிருக்கும்.

எமது சூழலை நாம் தான் முன்னி ன்று பாதுகாக்கும் அதே வேளையில் சூழலுக்கிணைவான எளிமையான தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து அத்னை பயன்பாட்டுக்கு விட்டால் சுற்றுச் சூழலை நாம் இன்னும் இலகுவாக

இரசாயனங்களின் தாக்கம் பெரிதாக தெரிவதில்லையெனிலும் தற்போது அசே தன இரசாயனங்களின் தாக்கம் பரவலாக அநேகமான நாடுகளில் வெளித்தெரிய தொடங்கியிருப்பதும் பல வகையான நோய்களுக் கள் ஏற்படுவதும் பலரையும் அசேதன இரசாயனங்களின் பாவனையிலிருந்து விலகி யிருக்க வைத்திருந்தாலும் மாற்று வழிகள் இல்லாத போது வேறு வழியின்றி இவ ற்றை தொடர்ந்தும் பயன் படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டி ருக்கின்றனர்.

ஆனால் பலநாடுகளில் சேதன முறை விவசாயம் முன்னுரிமை கொடுக்கப்பட்டு முன்னெடு க்கப்படுகின்றது.



மூலம் நாம் சிறந்த விளைச்சலைப் பெற முடியும் என்பதனையும் ஆராய்ச்சியின் மூலமாக கண்டறிந்துள்ளோம்.

மண்புழு விவசாயியின் நண்பன். இது மண்ணினுள் வாழ்வதனால் காற்றோட் டத்திற்கு உதவுவதுடன் சேதன துணிக்

கைகளை உட்கொண்டு அவற்றை சிற ந்த சேதன பசளையாக மாற்றிவிடு கின் றது.

அத்துடன் தாவரம் இலகுவாக அகத் துறுஞ்சுவதற்கும் ஏதுவானதாக இருக் கின்றது.

இத்துடன் மண்புழு வளர்ப்பின்போது உருவாகும் மண்புழு உரத்தில் நீரை தெளிப்பதன் மூலம் மண்புழு திரவம் பெறப்படுகின்றது.

இத்திரவத்தினை தாவரத்தின் மேற் பரப்பிற்கு குறிப்பாக இலைப்பரப்பிற்கு தெளிக்கலாம். இதனுடன் பசுவின் சலத் தையும் சேர்த்து விவசாயிகள் தெளிப்ப தையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் மண்புழு திரவத்துடன் தற் போது வளியூட்டப்பட்ட மண்புழு உர தேநீரும் தயாரித்து தாவரத்திற்கு தெளி க்க முடியும். விபரம் அடுத்த வாரத்தில்.

(தொடரும்...)

# ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்படுபவரை பெரும்பான்மை சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்

## ஐ.தே.க, ஜ.க , ஜே.வி.பி ஆகிய கட்சியினர் தெரிவிப்பு

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை பொது வேட்பாளராக நியமிக்க எந்தவித தேவையும் இல்லை. அவசியமிருப்பின் அவருடன் பேச்சுவார் த்தை நடத்துவோம் என ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ள நிலையில் விக்னேஸ்வரனை நியமிப்பதில் தவறில்லை.

எனினும் பெரும்பான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவரின் தேவையுள்ளது என்று ஜே.வி.பி. தெரிவித் துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமாயின் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பொருத்தமானவர்.

இது குறித்து எதிர்க்கட்சிகளின் நிலைப் பாடு என்ன? என்று கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கரு த்து தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சிகளின் தலை வர்கள் மேற்கண்டவாறு கருத்து தெரிவித் தனர்.

இது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவிக்கையில், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ் வரனை பொது வேட்பாளராக நியமிப்பது தொடர்பிலோ அல்லது வேறு ஒருவரை பொது வேட்பாளராக நியமிப்பதா என்பது குறித்து நாம் இதுவரையில் முடிவெடுக்க வில்லை. அதற்கான அவசியம் இப்போதை க்கு இல்லையென்றே நாம் நினைக்கின் றோம்.

அரசாங்கம் எவ்விதமானதொரு தேர்தலை நடத்தும் என்பது இன்னமும் முடிவான நிலை யில் இவ்வாறான கேள்வி எழுவது பொருத்த மற்றதொன்றாகும்.

விக்னேஸ்வரன் மட்டுமல்ல யார் வேண்டு மென்றாலும் பொது வேட்பாளராக தெரிவு செய்யப்படலாம்.

ஆனால் தெரிவு செய்யப்படுபவர் பெரும் பான்மை இன சமூகத்தினரால் ஏற்றுக்கொள் ளப்பட வேண்டும். வெறுமனே சிறுபான்மை தமிழ் மக்களின் வாக்குகளை மாத்திரம் வைத்து வெற்றி பெற முடியாது.

எனவே காலத்தின் தேவைக்கேற்ப நாம் தீர்மான ங்களை எடுப்போம் எனவும் அவர் தெரி வித்தார். இதேவேளை ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா கருத்து தெரி விக்கையில்,

ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட் பாளர் யார் என்பது தொடர்பில் சரியான முடி வுகளை எடுக்க வேண்டும். ஏனைய தேர் தல்களைப் போல் அல்ல ஜனாதிபதி தேர்த லென்பது நாட்டின் ஆட்சி மாற்றத்தை தீர் மானிக்கும் முக்கியமான தேர்தலே இது. இதன்போது எதிர்க்கட்சிகள் ஒன்றிணை ந்தால் மட்டுமே பொது வேட்பாளருக்கான தேவை இருக்கும்.

எனவே ஏனைய எதிர்க்கட்சிகள் மற்றும் எம்முடன் இணைய விரும்பும் சிறு கட்சிகள் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னரே சரியானதும் உறுதியானது மொரு வேட்பாளரை நியமிக்க முடியும். எனவே இது தொடர்பில் முடிவுகளை எடுக்க காலம் உள்ளது.

விக்னேஸ்வரனை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக நியமிப்பது குறித்து ஒரு சிலரின் தனிப்பட்ட கருத்துக்கள் வந்துள்ளதே தவிர சரியான தகவல் எதுவும் தெரிவிக்க வில்லை.

அனைத்து இன மக்களையும் கவரக் கூடிய வகையில் ஒருவரை நியமிப்பதே சரி யானதாக அமையும் எனவும் அவர் தெரி வித்தார்.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன் னணியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலுக்கான பொது வேட் பாளராக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை நியமிப்பது தவறில்லை. அவருக்கு அதற்கான உரிமையும் தகுதியும் உள்ளது.

ஆயினும் மூவின மக்களின் வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலின் போது அவசியமானது. எனவே தமிழர்களின் முழுமையான வாக்குகள் அவசியம் என்பதைப் போலவே சிங்கள மக்களின் வாக்குகளும் அவசியம்.

பிரதான எதிர்க்கட்சியாகவோ அல்லது பொது எதிர்க்கட்சியாகவோ இணைந்து தேர்தலில் போட்டியிட்டாலும் சிங்கள மக்களின் வாக்குகளை பெறவேண்டியதொரு தேவை உள்ளது. எனவே அதற்கு ஏற்றாற் போலவே வேட்பாளரையும் நியமிக்க வேண்டும்.

எனினும் மக்கள் விடுதலை முன்னணி யினரைப் பொறுத்தமட்டில் பொது வேட்பா ளராக நியமிக்கப்படுபவர் அரசியல் கட்சி களை பிரதி நிதித்துவப்படுத்தாதவராகவே இருக்க வேண்டும்.

எந்தவொரு கட்சியின் சார்பில் நிறுத்தப் பட்டாலும் அதற்கு நாம் ஆதரவு தெரிவிக்க மாட்டோம்.

மேலும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைத்தாலோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் யாரும் ஆட்சியமைப்பதனாலோ நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்பட போவதில்லை.

தத்தமது சுயநலத்திற்காகவும் சர்ச்சை களை ஏற்படுத்தவுமே இவ்வாறான கருத் துக்கள் முன்வைக்கப்படுகின்றது என்றார்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பாதுகாவலர்களாக இளைஞர்கள் உருவாகுவார்கள்



## ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

ஆட்சி அதிகாரத்தில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதும் நாட்டின் எதிர்கால நல்லாட்சிக்காக அவர்களை தயார்படுத்துவதும் எமது கடமையாகும்.

இலங்கையில் 2011இல் இளைஞர் பாராளுமன்றம் ஆரம்பித்தது. இதில் சகல மதங்களையும் சேர்ந்த 335 பிரதிநிதிகள் உள்ளனர் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

உலக இளைஞர் மாநாட்டின் நேற்று முன்தின அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிராமங்களையும் முழு நாட்டையும் தழுவிய 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களும், இந்த இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் விவாதங்களில் பங்கேற்றனர்.

அத்துடன் தீர்மானம் எடுக்கும் விடயங்களிலும் அவர்கள் பங்கேற்கின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் வெளியான இளைஞர் கொள்கை நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்களிப்பை வலியுறுத்தியுள்ளது.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலைப பொறுத்தவரை எவ்வளவு தூரத்துக்கு இளைஞர்களை ஈடுபடுத்த முடியுமோ அது பலனைத் தரும்.

எமது செயற்பாட்டில் அவர்கள் பங்குதாரர்கள் என்பதை நாம் உணர்ந்தால் பொதுப் பெறுமானங்களை நாம் அதிகரிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

2015 ஆம் ஆண்டுக்கு பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் புத்தாயிரமாம் அபிவிருத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். துரித அபிவிருத்தியை இலக்காகக் கொண்டே இவை உருவாக்கப்பட்டது.

வேறுபட்ட குடியியல் சார்ந்த குழுக்களை கொண்டிருக்கும் இளைஞர்களின் சிந்தனைகளும் பங்களிப்பும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் உள்வாங்கப்பட வேணடியவை என்பது முக்கியமானதாகும்.

கொழும்புபிரகடனமானது புலமையாளர்களாலும் கொள்கை வகுப்பாளர்களினாலும் இளை ஞர்களுடன் இணைந்து உருவாக் கப்பட்ட காரணத்தினால் அதன் தாக்கமும் விளைவுகளும் வலுவானவையாக இருக்கின்றன என்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

எதிர்கால இலக்கு என்ற ரீதியில் ஆக்கபூர்வமான சிந்தனைகளை வழங்கவேண்டியது இளைஞர்களின் கடமையாகும்.

இளைஞர்களின் எண்ணக் கருக்களை கடந்த காலங்களில் உள்வாங்காமையும் தொடர்ச்சியாக அவற்றினை தட்டிக்கழிப்பதும் மூத்த தலைமுறையினரால் தொடர்ச்சியாக விடப்படும் தவறாகும். இளைஞர்களின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சமூகங்களும் குழுக்களும் செயற்படவேண்டும்.

சமூகங்களும் குழுக்களும செயற்படும் விதம் தொடர்பாக நாம் அனைவரும் திருப்தி கொண்டுள்ளோமா? இளைஞர்களின் முன்னேற்றகரமான செயற்பாடுகளை, அடுத்த ஆண்டுகளில் ஏன் பயன்படுத்த முடியாது? இளைஞர்களுக்கு எவ்வாறான திறமை இருக்கின்றதோ அவர்கள் அவ்வழியில் செயற்படுவதற்கு நாம் ஆதரவாக இருக்கவேண்டும் என்ற அந்த எணணம் உள்ளத்திலேயே தோற்ற வேண் டும்.

இளைஞர்கள் சிறந்த கல்வி, சுகாதாரம், வீடு, தொழில்நுட்பம், வேலைவாய்ப்பு ஆகியவற்றை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். கொள்கைகள் வகுக்கப்படும்போது இளைஞர்களின் விருப்பங்களை கருத்திற்கொண்டு பின்னர் அவற்றினை அமுல்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டின் பாதுகாவலர்களாக இளைஞர்கள் ஒரு காலத்தல் உருவாகுவார்கள் என்ற நிலையில் தமது அரசாங்கம் எவ்வாறான பாதையில் பயணிக்கவேண்டும் என்பதனை தீர்மானிக்கவேண்டிய உரிமை அவர்களுக்கு உள்ளது.


உலக சனத்தொகையில் கிட்டத் தட்ட 50 வீதமானவர்கள் 25 வயதுக்கு குறைவானவர்களாகவும் 25 வீதமானவர்கள் 12 முதல் 24 வயதுடையவர்களாகவும் உள்ளனர்.

உலகளவில் 75 மில்லியன் இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

இளைஞர்களின் வேலைவாய்ப் பின்மை அதிகரிப்பு நெருக்கடி நிலைமைக்கு ஏதுவாக அமைகின்றது என்றார். (2)







வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இறுதி ஆங்கில விவாத போட்டி நிகழ்வு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வெற்றியீட்டிய யாழ்/வேம்படி பெண்கள் உயர் தர பாடசாலை மாணவிகளுக்கு கேடயம் வழங்குவதையும் அருகில் அதிபர் வேணுகா சண்முகரத்தினம் நிற்பதனையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## மக்கள் கருத்து சேகரிப்பு

(கொழும்பு)

தேசிய பேருந்து கட்டணக் கொள்கை தொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் மக்கள், கருத்துக்களை அனுப்பி வைக்கு மாறு தேசிய போக்குவரத்து ஆணைக் குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய பேருந்து கட்டண கொளகையை வெளியிடுவது தொடர்பான அமைச்சரவை துணை செயற்குழு மற்றும் புத்திஜீவிகள் குழு மூலம் பேருந்து கட்டண கொள்கையை புதுப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2)

# கடனட்டை மோசடியில் ஈடுபடுவோர் கைதாவர்

## பொதுமக்களின் உதவியை கோருகிறது புலனாய்வுப் பிரிவு

பிறருக்கு சொந்தமான இலத்திரனியல் அட்டைகளை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் ஏ.ரி.எம். நிலையங்கள் உள்ளிட்டவற்றில் கொடுக்கல்-வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த பல சந்தேக நபர்கள் தொடர்பலான தகவல்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

குற்றப் புலனாய்வுப் பிரிவில் நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய அதனை விசாரணை செய்து வந்த பொலிஸாருக்கே இந்த சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன. இந் நிலையில் சந்தேக நபர்களை கைது செய்ய பொதுமக்களின் உதவியை பொலிஸ் தலைமையகம் கோரியுள்ளது.

இவ்வாறு பிறருக்கு சொந்தமான இலத்திரனியல் அட்டைகளைப் பயன்படுத்தி கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபட்டுவரும் நபர்களை அடையாளம் காணும் விதமாக பல்வேறு சீ.சீ.ரீ.வி. கமராக்களில் பதிவான காட்சிகளை புலனாய்வுப் பிரிவினர் பெற்றுள்ளதாக குறிப்பிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் அஜித் ரோஹன அந்த சந்தேக நபர்களை கைது செய்ய பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என குறிப்பிட்டார்.

அத்துடன் சந்தேக நபர்கள் தொடர்பிலான தகவல்கள் கிடைப்பின் அதனை 0112422176, 0112326 670 அல்லது 0112320141 முதல் 145 வரையிலான தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது 0112380380 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ அறிவிக்குமாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சந்தேக நபர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் தொடர்ந்தும் அவதானம் செலுத்தியுள்ளனர் (2)

# உயிரிழந்த சொந்தங்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை தமிழர்களுக்கு கிடையாதா?

## பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி.கேள்வி

போர்க்காலத்தில் உயிரிழந்த சொந்தங்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்த தமிழ் மக்களுக்கு உரிமை கிடையாதா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

போர் இடம்பெற்ற காலத்தில் இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

போர்க் காலத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

இன்னமும் தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியா செல்கின்றனர். வடக்கில் இயற்கை அழிக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்க அமைச்சுக்கள்திணைக்களின் சில அபிவிருத்தித் திட்டங்களினால் இயற்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு பாரியளவில் இடம்பெறுகின்றது. வடக்கில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினத்தில் கொல்லப்பட்ட பெண் தொழிலாளி!

**மே** தினம் (01.05.2014) இந்தமுறை உயிர்ப்பலியுடன் சென்னையில் தொடங்கியது. தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமையை நினைவுபடுத்தும் விதத்தில் கொண்டாடப்படும் இந்த தினத்தில் தமிழக தலைநகரான சென்னையில் உள்ள சென ரல் ரெயில்வே'ஸ்டேஷனில் இரட்டைக் குண்டு வெடித்தது. அதில் ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த இளம்பெண் சுவாதி ஸ்பாட்டிலேயே குண்டு துகள்கள் பாய்ந்து உயிரிழந்தார்.

அவர் பெங்களூரில் பணிபுரிந்து கொண்டிருப்பவர். தனது திருமண நிச்சயார்த்தம் செய்யும் பொருட்டு விடுப்பு எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய தொழிலாளி. கொல்லப்பட்ட சுவாதி ஒரு புறமென்றால், ஏறக்குறைய 14 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கவுகாத்தி விரைவு ரயில் பெட்டியில் வெடித்த இந்த இரட்டைக் குண்டுகள் ரெயில்வே ஸ்டேஷனை மட்டுமல்ல, தமிழகத்தையே உலுக்கி விட்டது.

இரட்டைக் குண்டுவெடிப்பிற்கு இரு நாட்களுக்கு முன்புதான் ஐ.எஸ்.ஐ. உளவாளி என்று ஜாகீர் உசேன் என்பவரைக் கைது செய்தது தமிழக காவல்துறை. இந்த கைது நடைபெற்ற பிறகு நிகழ்ந்த ரயில் குண்டு வெடிப்பு, தமிழகத்தில் இன் னொரு பக்கம் பீதியைக் கிளப்பியது. ஜாகீர் உசேன் கைது செய்யப்பட்டும், ஏன் இந்த குண்டு வெடிப்பை தடுக்கத் தவறியது காவல் துறை என்று கேள்வி எழுப்பி, முதலமைச் சர் ஜெயலலிதாவைச் சாடினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

ஆனால், முதலமைச்சர் ஜெயலலிதாவோ, ஏற்கனவே தி.மு.க. ஆட்சியில் நடந்த கோவை குண்டுவெடிப்பை சுட்டிக் காட்டி தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சாடினார். அவர்களுக்குள் நீங்கள் ஆர்ம் சேர் அரசியல்வாதி என்று முதலமைச்சர் ஜெயலலிதா கலைஞர் கருணாநிதியை விமர்சித்தார். உடனே, கோவை குண்டு வெடிப்பு நிகழ்ந்தவுடன் சம்பவ இடத்திற்குச் சென்ற நானா ஆர்ம்ஸ் சேர் பாலிட்டிஷியன் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில் இந்த குண்டுவெடிப்பு நிகழ்ந்தவுடன் ஸ்பாட்டிற்குப் போன தமிழக காவல்துறை தலைவர் ராமானுஜம் மற்றும் தேர்தல் கால டி.ஜி.பி. அனுப் ஜெய்ஸ்வால் ஆகியோர் விசாரணை மேற்கொண்டார்கள். அதன் முடிவில் இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு மாற்றப்பட்டது. அந்த துறையின் ஐ.ஜி. மகேஷ் குமார் இது பற்றிய விசாரணையை மேற்கொண்டார்.





இதற்கிடையில் தீவிரவாதம் தொடர்புடைய வழக்கு என்பதால் இந்த வழக்கினை தேசிய புலனாய்வு அமைப்பு(நேஷனல் இன்வெஸ்டிகேட்டிவ் ஏஜென்ஸி) விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. ஆனால், தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் பொறுத்தவரை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த தேசிய புலனாய்வு அமைப்பினை ஆரம்பத்திலிருந்தே ஏற்றுக் கொள்ளவில்லை.

மாநில அரசின் சட்டம் ஒழுங்கு அதிகாரத்தில் குறுக்கிடும் செயல் இது என்று மத்திய அரசை சாடிக்கொண்டிருந்தார். குறிப்பாக இதைக் கொண்டு வந்த தமிழகத்தைச் சேர்ந்த உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரத்தைக் கூட சாடினார். பிரதமர் தலைமையிலான கூட்டங்களில் கூட இதை எதிர்த்து பேசியுமிருக்கிறார். கடிதங்களும் எழுதியிருக்கிறார்.

சட்டம்- ஒழுங்கு என்பது மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சப்ஜெக்ட். அதன் கீழ் தான் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வருகிறது. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட மாநில அரசு இருக்கும் போது மத்திய அரசு ஏன் இதில் எல்லாம் குறுக்கிட வேண்டும் என்பது அவரது கேள்வி. இதனால் தேசிய புலனாய்வு அமைப்பிற்கு இந்த வழக்கு செல்லாது என்பதே ஊடகச் செய்திகளாக மாறின. இதுபற்றி வெளிப்படையாகக் கோரிக்கை வைத்த் பா.ஜ.க. மாநில தலைவர்களில் ஒருவரான இல. கணேசன், நரேந்திர மோடியே அச்சுறுத்த வைக்கப்பட்ட வெடிகுண்டு.

ஆகவே, இந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்பிற்கு அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அது பற்றியெல்லாம் சர்ச்சை எழுந்ததும், தேசிய புலனாய்வு அமைப்பு வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. அதுவும் விசாரணை மாநில அரசுடன் செயற்படுகிறது. அதேபோல் மத்திய அரசின் நேஷனல் செக்யூரிட்டி கார்டு அதிகாரிகள் இந்த விசாரணையில் தமிழக அரசுடன் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிக்கை விட்டார்.

இன்னும் இந்த வழக்கு தேசிய புலனாய்வு அமைப்பிற்கு போகவில்லையென்றாலும், தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.சி.ஐ.டி அமைப்பு இதை விசாரித்து வருகிறது. இதுபோன்ற வழக்குகளை இந்த அமைப்புதான் மாநில அளவில் விசாரிக்கும். ஏற்கனவே பா.ஜ.க. உள்ளிட்ட இந்து தலைவர்கள் பலர் கொல்லப்பட்ட வழக்குகளையும் இந்த சி.பி.சி.ஐ.டி அமைப்புதான் விசாரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த விசாரணையில் ரயில் நிற்பதற்கு முன்பு ஒருவர் அப்பெட்டியிலிருந்து இறங்கி ஓடும் காட்சிகள் அடங்கிய வீடியோ காட்சிகள் பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றை வைத்து வெடிகுண்டு தாக்குதலுக்கான க்ளூ பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். சம்பவம் நடைபெற்ற அன்று அந்த கவுகாத்தி ரயில் இரண்டரை மணி நேரம் தாமதம் ஆகாமல் இருந்திருந்தால் ஆந்திர மாநில எல்லைக்குள் சென்றிருக்கும். அங்குதான் நரேந்திரமோடி பிரசாரத்திற்கு வந்திருந்தார். மோடியின் பிரசாரத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்தக் குண்டுகள் வைக்கப்பட்டதா என்று விசாரணை நடைபெற்று வருகிறது.

அதுமட்டுமின்றி இதே மாதிரி ஏற்கனவே பெங்களூர் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்றது. அதே போல் பாட்னாவில் நரேந்திரமோடி கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இந்த சம்பவங்களுக்கும், சென்னை குண்டு வெடிப்பிற்கும் தொடர்பு இருக்கிறதா என்ற கோணத்திலும் தமிழக பொலிஸ் விரைந்து விசாரித்து வருகிறது.

குறிப்பாக பொலிஸ் துறையின் பல டீம்கள் தனித்தனி குழுக்களாக பிரிக்கப்பட்டு, இந்த மாநிலங்களுக்கு எல்லாம் சென்றுள்ளது என்று அதிகாரபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட ஜாகீர் உசேனை 5 ஆம் திகதி நீதிமன்றத்தில் தமிழக காவல்துறை ஆஜர்படுத்தியது.

அவரை 9 நாள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க க்யூ பிராஞ்ச் பொலி ஸாருக்கு



சென்னை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. இவர் இலங்கையிலிருந்து தமிழகம் வந்ததும், பாகிஸ்தான் உளவாளி யாக இருந்தார் என்றும் பல்வேறு தகவல்கள் உலா வருவதால், ஏற்கனவே இலங்கை மீது கண்டனக் கணைகள் விடுத்துக்கொண்டிருக்கும் தமிழ் அமைப்புகள் இதையும் கையிலெடுக்கும் ஆபத்து இருக்கிறது.

• போதாக்குறைக்கு பா.ஜ.க. மாநிலத் தலைவர்களில் ஒருவரான இல.கணேசன், பாகிஸ்தான் உளவாளிகளுக்கு இலங்கையில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்ற கருத்துச் சொல்ல, அதுவும் தமிழகத்தில் சூடுபிடித்துள்ளது. இதை இலங்கைத் தூதரக அதிகாரிகள் உடனடியாக மறுத்துள்ளார்கள் என்பது ஆறுதல் தரும் செய்தியாகும்.

இது தவிர கடலூரில் அஸ்ராப் அலி என்ற நபரை ராஜஸ்தான் பொலிசார் தமிழ கம் வந்து கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். அஸ்ராப் அலியிடமும் சென்னை குண்டு வெடிப்பு குறித்து தமிழக பொலிசார் விசாரித்துள்ளனர். இப்படி பல முனை விசாரணை பரபரப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

ரயில் நிலையத்தில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதல் சென்னையைக் குறிவைத்து நடத்தப்பட்டதல்ல என்ற இன்னொரு வாதமும் இருக்கிறது. ரயில் தாமதமாகாமல் இருந்திருந்தால், அது ஆந்திர மாநிலத்திற்குள் சென்றிருக்கும் என்ற கூற்றும் அடிபடுகிறது. ஆனால், ரயில் சென்று கொண்டிருக்கும் போது வெடிக்கும் விதத்தில் குண்டுகள் வைக்கப்பட்டன என்று இன்னொரு கருத்தும் பரப்பப்படுகிறது.

எது எப்படியோ பல வருடங்களுக்குப் பிறகு தமிழகத்தில் இப்போது சென்றல் ரயில் நிலையத்தில் நிகழ்ந்துள்ள இந்த இரட்டை குண்டுவெடிப்பு தமிழகக் காவல்துறை மீதான விமர்சனங்களை முன்வைக்க வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அதனால்தானோ என்னவோ, தீவிரவாதிகளை கண்டதும் சுட உத்தரவு என்ற செய்தி பத்திரிகை வாயிலாக வேகமாக வெளிப்படுத்தப்படுகிறது. மக்கள் இது போன்ற குண்டுவெடிப்புகளைப் பார்த்து மிரண்டு விடக்கூடாது என்பதற்காகவும் மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகவும் காவல்துறையின் சார்பில் இந்த முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

ஜாகிர் உசேன் பொலிஸ் காவலில் எடுத்து விசாரிக்கப்படும் போதுதான் தமிழகத்தில் எந்த மாதிரி தாக்குதல்களை நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தார்கள், தமிழகத்தில் ஸ்லீப்பர் செல்கள் இருக்கிறதா, இந்த தாக்குதல்களை திட்டமிட என்ன காரணம் என்பதெல்லாம் வெளிவரும் என்று பொலிஸ் தரப்பில் கூறுகிறார்கள்.

அது மட்டுமின்றி, ஜாகிர் உசேன் உள்ளிட்ட தீவிரவாதிகளுக்கு வெளிநாடு களின் உதவி எவ்வளவு தூரம் கிடைத்துள் ளது. எங்கெல்லாம் பயிற்சி பெற்றுள்ளார் கள் என்பது போன்ற தகவல்களும் கிடைக்கலாம். அது மாதிரி தகவல் கிடைக்கும் போது மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று அது தொடர்பான நடவடிக்கைகளை மேற் கொள்ள தமிழக காவல்துறை வலியுறுத்தலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆனால் இதுவரை தேசிய புலனாய்வுத் துறை அமைப்பு தனியாக இது பற்றி விசாரணை நடத்துகிறதா என்ற தகவல் முழுமையாக வெளியாகவில்லை. குண்டு வெடிப்பு நிகழ்ந்த ரயில்வே நிர்வாகம் சார்பில் விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குண்டு வெடிப்பு நடந்தவுடன் மத்திய அரசின் என்.எஸ்.ஜி (நேஷனல் செக்யூரிட்டி கார்டு தமிழக அரசுக்கு உதவும் வகையில் ஸ்பாட்டிற்கு வந்திருக்கிறது.

இது தீவிரவாதம் தொடர்புடைய விடயம் என்பதால் மாநில அரசும் தீவிர விசாரணை மேற்கொண்டிருக்கிறது. ஆனால், அனைவருமே ஆறுதல் அடையும் செய்தி ஒன்றுதான். ஏப்ரல் 24 ஆம் திகதிதான் தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளின் தேர்தல் நடந்து முடிந்தது.

அந்த தேர்தல் நடக்கும் நேரத்தில் இது போன்ற சம்பவங்கள் அரங்கேறியிருந்தால், பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வது தமிழக காவல்துறைக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கும். அது போன்ற சூழ்நிலை உருவாகாமல், தேர்தல் நடந்த பிறகு இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந் துள்ளது.

அதுமட்டுமின்றி நல்ல வேளையாக உயிர்சேதம் எதுவும் பெருமளவில் ஏற்படவில்லை. ஆந்திர மாநிலத்தின் அந்த இளம் பெண் மட்டும் வாழ்க்கையின் கலர்புல் கனவுகளுடன் சிட்டாக பறந்து தன் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தார். அவரது ரக்கையை முறித்து, உயிரைப் பறித்துவிட்டது இந்த குண்டு வெடிப்பு என்பதுதான் மிகுந்த சோகம்.

அப்பெண்ணின் தந்தையும் தாயும் தங்கள் தலையில் பேரிடி விழுந்தது போல் தன் மகளின் உடலைப் பார்த்து நின்றது பார்ப்பவர் மனங்களை பதறவைத்தது. அதனால்தான் கட்சி வித்தியாசமின்றி அனைத்துக் கட்சி தலைவர்களும் அரசு மருத்துவமனைக்குச் சென்று காயம்பட்டவர் களை சந்தித்தார்கள். கண்டன அறிக்கை களை வெளியிட்டார்கள்.

இதற்கிடையில் படுகாயமடைந்தவர்கள் பல மாநிலத்தவரும் இருக்கிறார்கள். அவர்களில் பலர் சிகிச்சை பெற்று வீடு திரும்பி விட்டார்கள். ஒரு சிலர் மட்டுமே இன்னும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

ஆனால், குண்டு வெடிப்பை நிகழ்த்திய தீவிரவாதிகளைத் தேடும் படலம் வெகு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் மீண்டும் தலை தூக்க நினைக்கும் இந்த தீவிரவாதத்தை முளை யிலேயே கிள்ளி எறிய தமிழக காவல்துறை அதிரடி நடவடிக்கைகள்ள மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், இதில் கடைசி வரை மாநில மத்திய அரசு மோதல் ஏதும் வராத அளவிற்கு விசாரணைகள் முடிவு பெற்று தீவிரவாதிகளின் நெட்ஓர்க் உடைக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது

## நாடாளுமன்றில் அமை.தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



**(கொழும்பு) கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 70 சதவீதமானவை அமுல்படுத்தப்பட்டுள்ளது டன் இவற்றை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

எஞ்சிய பரிந்துரைகளும் கிரமமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்காக ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி சஜித் பிரேமதாஸ பிரதமரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் குறிப்பிடுகையில்,

அரச- ஊழியர்களின், நியமனங்கள் இடமாற்றம் என்பவற்றில் அரசியல் தலையீடுகள் உள்ளன என்ற கருத்திற்கு நான் ஒருபோதும் உடன்பட மாட்டேன்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழு உட்பட சகல சுயாதீன ஆணைக் குழுக்களும் சுதந்திரமாகவே இயங்குகின்றன. அங்கு எந்தவித பக்கச் சார்புகளும் காணப்படவில்லை.

மாறாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்திலேயே நல்லாட்சியின் கூர்மை இழந்தது.

வில்லியம் குணவர்தன பகிரங்கமாக தாக்கப்பட்டார். பலருக்கு பகிரங்க அநீதி இழைக்கப்பட்டது. இந்த மோசமான கலாசாரத்தை அறிமுகப்படுத்தியவர்கள் ஐ.தே.கட்சியினர்.

மூன்று தசாப்தங்கள் அழிவடைந்த நாடு தற்போது சகல துறைகளிலும் முன்னேற்றப்பட்டு வருகிறது. நல்லாட்சி என்ற மாயையை சுமந்து கொண்டு செயற்படும் நாடுகளில் கூட நல்லாட்சி இல்லை.

மாறாக தற்பொழுது நல்லாட்சி இடமபெறுவதுடன், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 70 சதவீதமானவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, உறுப்பினர்கள் கேள்விகள் கேட்கும் போது கடந்த கால சம்பவங்கள், வரலாற்றை நினைவு வைத்திருக்க வேண்டும் என்றார். (2)

# விசா வழங்குவது குறித்த சட்டங்களில் மாற்றம் செய்யப்படும்

## அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு விசா வழங்கும் நடவடிக்கைகளை கடுமையாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டுப்பிரஜைகள்இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு விசா வழங்குவது குறித்து தற்போது அமுலில் உள்ள சட்டங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளது.

கடுமையான சட்ட விதிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாதாரண மக்கள் மட்டுமன்றி அரசாங்கப் பிரதிநிதிகள் கூட வெளிநாட்டு விசா பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அமைச்சரவைய்யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் விசா வழங்குவது தொடர்பில் கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

எதிர்காலத்தில் இலங்கையிலும் விசா சட்டங்களை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

15 தொடக்கம் 18 வயது வரையிலானவர்களுக்கு விசா வழங்குமாறு ஐரோப்பிய நாடுகள் கோரியுள்ளதாகவும் இவர்களின் நோக்கம் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயிற்சி பெற்றுக் கொள்வதற்காக குறித்த சிறுவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்களது இலங்கை விஜயத்தின் நோக்கம் கண்டறியப்பட்டதன் பின்னரே விசா வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# ஆபிரிக்க ஒன்றியம் இலங்கையை அங்கீகரித்துள்ளது

ஆபிரிக்க ஒன்றியம் இலங்கையை அங்கீகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க இலங்கை உறவுகளில் புதிய சகாப்தமாக இந்த நடவடிக்கை கருதப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல இலங்கையை ஆபிரிக்க ஒன்றியம் அங்கீகாரம் செய்துள்ளது.இதற்கு முன்னர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே ஆசிய பிராந்திய வலயத்தில் ஆபிரிக்க ஒன்றியத்தினால் அங்கீகாரம் பெற்றுக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையுடன் கூடுதலான சமூகப் பொருளாதார உறவுகளைப் பேண சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக ஆபிரிக்க ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# விமலின் அடுத்த நகர்விற்காக ஐ.தே.கட்சி காத்திருக்கிறது

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு



(கொழும்பு)

ஜே.என்.பி. கட்சியின் விமல் வீரவன்சவின் அடுத்த நகர்விற்காக காத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவைத் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கையை ஏற்றுக் கொள்ளத் தவறினால் ஆளும் கட்சியிலிருந்து விலக நேரிடும் என அண்மையில் விமல் வீரவன்ச பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஊவா மாகாணசபைத் தேர்தல், ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதனால் விமல் வீரவன்சவின் அடுத்தகட்ட நகர்வு கண்காணிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதாக விமல் வீரவன்ச விடுத்த எச்சரிக்கை மெய்யானது என்றே கருதுவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.(2)

# இன்று ஒரு தகவல்

## புரந்தரதாசர்

கன்னட தேசத்திலே ஒரு இரத்தினக்கல் வியாபாரி இருந்தார். அவர் பெயர் நவகோடி நாராயணன். மிகவும் வசதி படைத்தவர். பெரிய கோடீஸ்வர பரம்பரையைச் சேர்ந்தவர்.

பணம்தான் அவரிடம் தாராளமாக இருந்ததே தவிர மனம் இல்லை.

அடுத்தவர்கள் ஒரு உதவி என்று வந்து கேட்டால் திரும்பிக்கூட பார்க்கமாட்டார். தான தர்மம் எதுவும் செய்யமாட்டார். மற்றவர்களையும் உதவி செய்வதற்கு விடமாட்டார். தடுத்து நிறுத்துவதில் சாலச் சிறந்தவர்.

அவரது மனைவி லஷ்மி அம்மாளுக்கு மிகவும் தாராள மனம்... யார் வந்து உதவி என்று கேட்டாலும் ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைப்பவர். இருந்தாலும் அந்த அம்மாவையும் எதுவும் செய்ய விடுவதில்லை. அவரது மனம் எப்போதுமே சங்கடப்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஒரு நாள் அந்த நவகோடி நாராயணன் தனது கடையில் இருந்து வியாபாரத்தை கவனித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் வயதான ஒருவர் அவர் முன்வந்து நின்றார்.

"ஐயா! என் மகளுக்கு திருமணம். மிகவும் சங்கடமாக இருக்கிறது. பணம் இல்லை. நீங்கள் ஏதாவது நிதி உதவி செய்தால் நலமாக இருக்கும்" என்றார்.

இவர் எப்படி கொடுப்பார்? "அதெல்லாம் ஒன்றும் இல்லை. சென்று வா..." என்றார். அந்தப் பெரியவர் இதைக் கேட்டதும் உடனே கடையை விட்டுப் புறப்பட்டார். நேராக நவகோடி நாராயணன் வீட்டிற்கு சென் றான்.

அங்கே அந்த அம்மா துளசி பூசை செய்து கொண்டிருந்தார். இந்தப் பெரியவர் தனது நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி கேட்டார்.அந்த அம்மா இவரின் பரிதாப நிலையை அறிந்து தனது வைர மூக்குத் தியை கழற்றிக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு அந்தப் பெரியவர் நேராக எங்கே போனார் தெரியுமா? நவகோடி நாராயணன் கடைக்கு வந்தார். இந்த மூக் குத்தியை வைத்துக் கொண்டு பணம் கொடுக்குமாறு கேட்டார். அவர் மூக்குத்தியை வாங்கிப்பார்த்தார்.

"என்ன இது? இது எங்களின் வீட்டு மூக்குத்தி மாதிரி தெரியுது...?" என்று சந்தேகப்பட்டார்."என்ன செய்யலாம்?" என்று யோசனை செய்தார்.

அந்த மூக்குத்தியை ஒரு பெட்டியிலே வைத்துப் பூட்டினார். "ஐயா சற்று இங்கே அமர்ந்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து நேராக வீட்டிற்கு சென்றார்.

"லஷ்மி இங்கே வா" என்று அழைத்தார். "எங்கே உன் மூக்குத்தி?" என்று கேட்டார்.

"இன்று எண்ணெய் தேய்த்துக் குளித்தேன். அது தான் கழற்றி வைத்திருக்கிறேன்" என்றார்.

"எங்கே வைத்திருக்கிறாய் எடுத்து வா பார்க்கலாம்" என்றார்.

அந்த அம்மாவிற்கு பயம் பற்றிக் கொண்டது. எதுவுமே செய்ய முடியவில்லை.

"துளசி அம்மனே! நீதான் துணை!" என்று வேண்டிக் கொண்டு பெட்டியைத் திறந்தாள்.

அங்கே பார்த்தால்... மூக்குத்தி இருந்தது. உடனே அதை எடுத்து கணவனிடம் கொடுத்தாள்.

நவகோடி நாராயணன் பார்த்தார். உடனே திரும்பிக் கடைக்கு வந்தார். அங்கே வந்து பார்த்தால் அந்தப் பெரியவரைக் காணவில்லை. பெட்டியிலே வைத்திருந்த மூக்குத்தியையும் காணவில்லை. அவருக்கு ஒரே ஆச்சரியம்.

மனைவி கொடுத்த மூக்குத்தியையும் மறுபடியும் எடுத்துப்பார்த்தார். அப்போது ஒரு காட்சி அதிலே தெரிந்தது. பாற்கடலிலே நாராயணன் ஆதிசேஷன் மேலே படுத்திருக்கிறார். எதிரிலே நாரதர் நிற்கிறார். அந்த நாரதர் தான் என்ற உணர்வு நவகோடி நாராயணனுக்கு ஏற்பட்டது. அவ்வளவுதான்! உடனே வீட்டை அப்படியே திறந்து விட்டு விட்டு மனைவியை அழைத்துக் கொண்டு பண்டரிபுரம் சென்றார்.

"போவதற்கு முன்னர் நமது சொத்துக்களையெல்லாம் ஏழை மக்களிடம் கொடுத்து விட்டுப் போவோம் "என்றார்.

"அப்படி செய்யக்கூடாது என்றார் "நாராயணன்.

"என்ன இது... முன்பு போலவே அப்படியே செய்கிறீர்கள்" என்றாள்.

"முன்பு அந்த சொத்து என்னுடையது என்று நினைத்தேன். அது இப்போது பண்டரிநாதனுடையது என்று தெரிந்து விட்டது" என்றார்.

அதனாலே அதை யாருக்கும் கொடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை? என்று கூறிவிட்டு புறப்பட்டார்.

அப்படி புறப்பட்ட நவகோடிநாராயணன்யார்என்று நினைக்கிறீர்கள்.

அவர்தான் பின்னாடி புரந்தரதாசரா மாறி நிறைய கீர்த்தனைகளையெல்லாம் எழுதினார்.

"சேர்! எங்கள் வீட்டுக்கார அம்மாவும் எண்ணெய் தேய்ப்பதற்காக மூக்குத்தியை கழற்றி ஒரு பெட்டியிலே வைத்தார். மறுபடியும் திறந்து பார்க்கும் போது அது காணாமல் போய் விட்டது "என்றார்.

"ஐய்யய்யோ அதன்பின் என்ன நடந்தது?" என்றேன்.

கடவுளை வேண்டினேன். மறுகணம் திடீரென அந்தப் பெட்டியிலேயே அது வந்துவிட்டது சேர்! என்றார்.

"இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்றேன்.

"எப்படி?" என்றேன்.

"அந்த மூக்குத்தியை நான்தானே எடுத்து அவசரத் தேவைக்கு அடகுக் கடையிலே வைத்திருந்தேன்" என்றார்.

அவர்–புரந்தரதாசர்
இவர்–மனைவிக்கு
நிரந்தரதாசர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் கடற்பரப்பில் மீளவும் தலைதூக்கியுள்ள சட்டவிரோத மீன்பிடி

## 20 வெளிமாவட்ட மீனவர்கள் அகப்பட்டனர்



(முல்லைத்தீவு)

கொக்கிளாய் கடற்பரப்பில் மிகை வெளிச்சத்துடன் கூடிய சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபட்ட 20 வெளி மாவட்ட மீனவர்களை நாயாற்று கடற்படையின் உதவியுடன் முல்லை. மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தடை செய்யப்பட்டுள்ள தொழில் முறைகளில் ஒன்றான மிகை வெளிச்சத்துடன் கூடிய சுருக்கு வலைத் தொழிலில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு 20 வெளிமாவட்ட மீனவர் கள் ஈடுபட்டனர்.

அவ்வேளை முல்லை.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் நாயாறு கடற்படையின் துணையுடன் அவர்களை கொக்கிளாய் கடற்பரப்பில் வைத்து கைது செய்து கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

சட்ட விரோத தொழிலில் ஈடுபட்ட 20 நபர்களையும் விசாரித்த முல்லை. மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் கணேச ராஜா ஆறு பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் மிகுதி 14 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் அப்ராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்தோடு ஆறு படகு, இயந்திரம்,சுருக்கு வலை போன்றனவற்றை அரசுடைமையாக்குமாறும் பணித்துள்ளார்.

சுருக்கு வலைகளின் மொத்த பெறுமதி 42 இலட்சமாகும்.

கொக்கிளாய் கடற்பரப்பில் சட்ட விரோதமான மீன்பிடியினால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் தற்போது முல்லை. மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்களத்தின் தீவிர கண்காணிப்பினால் மாவட்ட மீனவர்கள் திருப்தி அடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்பரப்புகளிலும் கடல் நீரேரிகளிலும் இடம்பெறும் சட்டவிரோத தொழில் முறைகள் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் தீவிர கண்காணிப்பினூடாக தடுக்கப்படுமென திணைக்களத்தினர் உறுதியளித்துள்ளனர். (9-267)

## மின் விளக்குகளை பொருத்துக

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக் குடபட்ட மாங்குளம் நகரப்பகுதியில் தெரு மின்விளக்குகள் பொருத்தாமையால் இரவு நேர பயணிகளும் பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் நகர்ப்பகுதியானது முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களை இணைக்கும் மையப்பகுதியாகும்.

இந்நகரம் ஊடாக அன்றாடம் ஆயிரக்கணக்கான பயணிகள் சென்று வருகின்றனர். அத்தோடு இந்நகர்ப் பகுதியிலேயே மாங்குளம் புகையிரத நிலையமும் அமைந்துள்ளது.

இந்நிலையில் தெரு மின்விளக்குகள் பொருத்தப்படாமையினால் இரவு வேளைகளில் பயணத்தை மேற்கொள்வோர் பேருந்து தரிப்பிடத்தில் இருட்டில் நின்றே பயணிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறாக இரவு வேளைகளில் வேறு தேவைக்காக வரும் பொது மக்களும் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் இவ்விடயம் தொடர்பில் கவனமெடுத்து மக்கள் கூடும் பொது இடங்களிலாவது மின் விளக்குகளை பொருத்துமாறு மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-15)

## பேருந்துகளில் அதிக விலைக்கு விற்கப்படும் பொருட்கள்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பேருந்துகளில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அதிக விலைக்கு தண்ணீர் போத்தல், சோடா என்பனவற்றை விற்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா அரச, தனியார் பேருந்துகளில் வியாபாரம் செய்பவர்கள் தண்ணீர் போத்தல், சோடா என்பவற்றை அதிக விலைக்கு விற்கின்றனர்.

போத்தலில் அடிக்கப்பட்ட விலையிலிருந்து 20 ரூபா கூடுதலாக விற்றுவருகின்றபோதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை எனவும் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, பேருந்து நிலையங்களில் கடை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகள் தங்களை அடிக்கடி பரிசோதிக்கும் அதிகாரிகள் பேருந்துகளில் கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்கப்படுவதை கண்டு கொள்வதில்லை என குற்றம் சாட்டியுள்ளனர். (9-250)

## முல்லை.சந்தை வியாபாரிகளால் பலசரக்கு வர்த்தகர்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பொதுச் சந்தை வளாகத்தினுள் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் சந்தையின் சில வியாபாரிகளால் தாம் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டி முல்லைத்தீவு வர்த்தக சங்கம் ஊடாக மகஜர் ஒன்றினை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் சு.ரவீந்திரநாதனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.




அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முல்லைத்தீவு பொதுச் சந்தை வளாகத்தினுள் பலசரக்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற நாங்கள், சந்தையின் மரக்கறி மற்றும் வெற்றிலை வியாபாரிகளினால் பாதிக்கப்பட்டுள்ளோம். குறித்த வியாபாரிகள் பலசரக்கு பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறாக மரக்கறி, வெற்றிலை வியாபாரம் செய்பவர்கள் பலசரக்குப் பொருட்களை விற்பனை செய்வதனால், பலசரக்கு பொருட்களை மாத்திரம் வியாபாரம் செய்து வருகின்ற நாங்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளோம் சந்தையினுள்ளும் வளாகத்தினுள்ளும் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் பொருட்களை மாறி மாறி விற்கமுடியாது. எனவே இப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தி பலசரக்கு வியாபாரிகளுக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரப்பட்டிருந்தது.

இம் மகஜர் நேற்று முன்தினம் பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-267)

# வீட்டுத்திட்ட மணலை பெறும் மக்களிடம் பொலிஸார் கையூட்டு



முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத்திட்டங்களுக்கு தேவையான மணலை பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழலை பயன்படுத்தி பொலிஸார் கையூட்டு பெறும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருவதாக வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கடுமையாக சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வரும் அதிகளவான வீட்டுத்திட்டங்களினால் பொதுமக்களின் மணல் தேவை அதிகரித்துள்ளது. எனினும் தேவையை பூர்த்தி செய்வதற்கு அரச கட்டளைப்படி சொற்ப அளவு மணலுக்கான அனுமதியே வழங்கப்படுகிறது

மணல் தேவையை பூர்த்தி செய்வதற்கு இந்த அனுமதிகள் போதாது என்பதால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விசேட அனுமதியை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று உதவி அரசாங்க அதிபர்களால் அனுமதி கோரப்பட்டுள்ள போதும் விசேட அனுமதியை வழங்க இலங்கை அரசு மறுத்துள்ளது.

இந் நிலையில் மக்களின் நிலையைக கருத்திற்கொண்டு உதவி அரச அதிபர்கள் மனிதாபிமானத்துடன் இலகு தன்மைகளை கடைப்பிடிக்கும் அணுகுமுறைகளுக்குள் பொலிஸார் ஊடுருவி, பொதுமக்களின் மணல் தேவையை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளில் பெரும் தடைக்கல்லாகவும், பாரிய அச்சுறுத்தலாகவும் இருந்து கையூட்டுகளை பெறும் நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

காடு கரம்பைகளில் ஆங்காங்கே நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் பொதுமக்களின் உழவு இயந்திரங்களை கண்டதும் தொலைபேசிகளில் தகவல் கொடுத்ததும் அவ்விடத்துக்கு விரைந்து வரும் பொலிஸார், ஆற்றுப்பக்கமே போகாத உழவு இயந்திர பெட்டிகளுக்குள் மணல் அள்ள பயன்படுத்தும் சவல், மண்வெட்டி, கூடைகளை தாமே போட்டுவிட்டு, அந்த உழவு இயந்திரத்தில் பயணித்தவர்கள் மணலை அள்ளி சென்றதாக கதை புனைந்து, நடைபெறாத ஒரு சம்பவத்தை நடைபெற்ற ஒரு காட்சியாக சித்திரித்து, தாம் கோரும் கையூட்டுத்தொகையை தருமாறும், இல்லாவிட்டால் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வோம் என்றும் மிரட்டி, பொலிஸார் கையூட்டு பெறும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றன.

பெரும்பாடுபட்டு உழைத்து சிறுகச் சிறுக சம்பாதித்த பணத்தை, பொலிஸாருககும் நீதிமன்றங்களுக்கும் செலுத்தி, எமது மக்கள் வீட்டையும் தம்மையும் கட்டியெழுப்ப முடியாமல் நித்தமும் சீரழிந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே உதவி அரச அதிபர்கள் ஒவ்வொரு பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளையும் அழைத்து, பொதுமக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டு உண்மைநிலையை, இடர் நெருக்கடி சூழலை, அவல வாழ்வை அவர்களுக்கு விளக்கி, அநாவசிய சட்ட நடவடிக்கைகளை தவிர்த்து பொதுமக்கள் மணலை இலகுவாக பெற்றுக் கொள்ள வழி வகை செய்ய வேண்டும்.

அத்தோடு, வன்னி மாவட்டத்தில் வீட்டுத்திட்ட தேவைக்கு ஏற்ப மணலை பெற்றுக்கொள்ளும் சூழலை ஏற்படுத்த அதற்கான அனுமதியை மத்திய அரசும் வழங்க வேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (9-4-6)

## கண்காட்சி

(மல்லாவி)

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தலும் கை வேலைக்குமான கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.பிரதாபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெ.ஜே.சி பெலிசியன், கௌரவ விருந்தினர்களாக முல்லை. மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன. (9-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரத சாரதி மீது பயணிகள் தாக்குதல்

பொல்கஹாவெல பிரதேசத்தில் புகையிரத சாரதி ஒருவர் மீது பயணிகள் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அண்மைக் காலமாக இடம்பெற்ற புகையிரத விபத்துக்கள் தொடர்பில், புகையிரத சாரதிகளுக்கு எதிராக சில ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் புகையிரத சாரதிகள் ஒத்துழையாமை அல்லது சட்டத்திற்கு வேலை செய்யும் தொழிற் சங்க நடவடிக்கையொன்றை மறைமுகமாக ஆரம்பித்துள்ளனர்.

மைல் கற்களில் குறிப்பிடப்பட்டுள்ள வேகத்திலேயே புகையிரதத்தைத் செலுத்துதல், சமிக்ஞைகளை மிகவும் நுட்பமாக அவதானித்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் புகையிரத சாரதிகள் சட்டத்தின் அடிப்படையில் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு சாரதிகள் கடமையாற்றுவதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக அலுவலகம் செல்லும் பயணிகள் உரிய நேரத்தில் அலுவலகம் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அநேகமான புகையிரதங்கள் குறித்த நேரத்திற்கு உரிய இடத்தை சென்றடைவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை விடவும் ஆபத்தான வழிகளில் புகையிரத சாரதிகள் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சாரதி மீதான தாக்குதல் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

# மாற்று பொருளாதார கொள்கை அரசாங்கத்திடம் இல்லை

## அஜித் பீ பெரேரா எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் திறந்த பொருளாதாரத்தை தவிர்ந்த மாற்று வழிகளை கடைப்பிடிக்கவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாற்று பொருளாதார கொள்கையொன்று அரசாங்கத்திடம் இல்லை என்று அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

திறந்த பொருளாதாரத்தின் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### வேலுப்பிள்ளை கமலநாதன்



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் டென்மார்க், லண்டன் Dartford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கமலநாதன் கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு Oshwal Hall Campbell Road, Croydon CRO 2SQ, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி ஜெயக்குமார் செல்வராணி



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Munster ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் செல்வராணி கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு Waldfriedhof Lanuheide 4, 48291, Telgate, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### மனோகரன் சுஜிகரன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் சுஜிகரன் கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு Elgin Mills Cemetery Visitation Chapel And Reception Centre, 1591 Elgin Mills ERichmond Hill, ON L4S 1M9, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.

### பிரான்ஸிஸ் பபியன் பென்ஜமின்



கண்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்ஸிஸ் பபியன் பென்ஜமின் கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் திருப்பலி 14 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு Our Lady Immaculate Church, 401 Ewell Road, Surbi ton, Surrey, KT67DG, UK என்னும்முகவரியில்ஒப்புக்கொடுக்கப்படும்.

### S.K சிவலிங்கம்



காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட S.K. சிவலிங்கம் கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு காரைநகர் தில்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். ஸ்ரீ

### கனகசபாபதி சின்னத்தம்பி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Leverkusen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி சின்னத்தம்பி கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு Friedhof Manfort, Manforter StraBe 182, 51373 Leverkusen என்னும் முகவரியில் நடைபெறும்.


# NORTHERN DEVELOPMENT FOUNDATION

**VACANCIES for a Development Economist and a Sociologist for its Jaffna Office**

**THE APPLICANTS MUST BE CONSCIOUS OF THE FOLLOWING AWARENESS AND SENSITIVITY NEEDS**

1. Post conflict –sensitive socio economic development.
2. Community and Social development of both rural and urban marginalized communities' giving priority to war affected women and children.

**FOCUS AREAS WILL BE:**

a) Rehabilitation and upgrading of socio-economic infrastructure,
b) livelihood support
c) Project Incubation/Facilitation of medium and large scale community and regional development projects.

**QUALIFICATIONS AND EXPERIENCE REQUIRED:**

a) Basic degree in Economics / Sociology preferably with experience in development programs described above.
b) Knowledge /work experience of project incubation/development, evaluation, monitoring and implementation, writing feasibility and monitoring reports,
c) basic computer skills in word and excel
d) Effective Communication skills with investors/donors, beneficiaries and officials

| | |
|---|---|
| **AGE:** | 25- 35 years. |
| **RESIDENCE:** | Resident in Jaffna |
| **LANGUAGE SKILLS:** | Good knowledge of English and Tamil both written and spoken and preferably basic spoken Sinhala. |
| **AVAILABILITY:** | Commence work one month of recruitment date |
| **REMUNERATION AND TERMS:** | Initial one year Contract with All Inclusive Allowance (Negotiable) |

*Please apply immediately by email to <careers@mnlaw.lk> with scanned copies of photo, certificates and testimonials.*

(C-7318)


# ஜல்லிக்கட்டிற்கு தடை விதித்தமை தமிழர் உரிமையை மறுக்கும் செயலாகும்

## ம.தி.மு.க.செயலாளர் தெரிவிப்பு

வீரத்தின் வெளிப்பாடாம் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்து இருப்பது, தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய பண்பாட்டு உரிமையை மறுக்கின்ற அநீதி ஆகும் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழர்கள், ஜல்லிக்கட்டுக் காளைகளைத் தங் கள் பிள்ளைகளைப் போல வீடுகளில் போற்றிப் பாது காத்து வளர்க்கின்றார்கள். அந்தக் காளைகள் சீறிப் பாய்ந்து வருகிறபோது வீர வாலிபர்கள் அதன் கொம்புகளையும், திமிலையும் பற்றிப் பிடித்துத் தங்கள் துணிச்சலையும் வேகத்தையும் நிலை நாட்டுகின்றார்கள்.

இதற்குத் தடை விதிப்பதற்கு உச்சநீதிமன்றம் கூறியிருக்கின்ற காரணம் எவ்விதத்திலும் ஏற்கத் தகுந்தது அல்ல. மாடுகளைத் துன்புறுத்துவதாகச் சொல்வது உண்மைக்கு மாறானது.

மெக்சிகோ, ஸ்பெயின் போன்ற மேலை நாடுகளில் மாடுபிடிப் போட்டியில் கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு காளைகளைத் துன்புறுத்திச சாகடிக்கின்றனர்.

ஆனால் தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டில், மாடுகள் மீது பாயகின்ற இளைஞர்கள், ஒரு சிறு தார்க்குச் சியைக் கூடப் பயன்படுத்துவது கிடையாது.

உயிரைப் பணயம் வைத்து, வெறுங்கைகளால் மாடுகளைப் பிடிக்கின்ற இளைஞர்களுக்குத்தான் காயம் ஏற்படுகின்றது.

நாள்தோறும் எண்ணற்ற வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. பலர் உயிரிழக்கின்றனர். அதற்காக இனிமேல் வீதிகளில் வாகனங்களை ஓட்டக் கூடாது என்று உத்தரவிட முடியுமா?

தமிழர்களின் நெடிய பாரம்பரியப் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றான, பல நூறு ஆண்டுகளாகத் தமிழர்களின் வாழ்க்கையோடு இணைந்து இருக்கின்ற ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திருப்பது, கிராமப்புறங்களில் வாழ்கின்ற வீரத் தமிழ் மக்கள் உள்ளத்தில் ஆறாத ரணத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் நாகரிகத்தின் மீது தொடுக்கப்பட்ட அத்துமீறலாகவே இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

இத்தீர்ப்பை மறு ஆய்வு செய்யத் தேவையான நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

தென்பாண்டி மண்டலத்தில் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு ஆதரவாகத் தமிழர்கள் மேற்கொள்ளும் அறப்போருக்கு, மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக் கழகம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது என அதில் அவர் கூறியுள்ளார். (2)

# இந்தியாவுடனான வர்த்தகத்தில் திருப்தி ஏற்படவில்லை

(கொழும்பு)

இந்தியாவுடனான வர்த்தக ஏற்பாடுகள் இன்னும் திருப்தி தரவில்லை என்று இலங்கை வணிகர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனவே மும்பையில் உள்ள இலங்கையின் வணிகர் சம்மேளன பிரதிநிதியை விரைந்து பணியாற்றுமாறு கேட்டிருப்பதாக சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில வர்த்தக உடன்படிக்கைகள் உள்ள போதும் இன்னும் இரண்டு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தில் தடைகள் உள்ளன.

இந்நிலையில் இலங்கை வணிகர் சம்மேளனம் அண்மையில் மும்பையில் இலங்கையின் உயர்ஸ்தானிகரக அலுவலர் சரோஜா சிறிசேனவுக்கும் அங்குள்ள உள்ளூர் வர்த்தக பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது கருத்துரைத்த இலங்கையின் உயர்ஸ்தானிகரக அலுவலர், மும்பையுடன் சிறந்த வர்த்தக உறவை பேணுவதற்கு இலங்கை எதிர்ப்பார்ப்பதாக குறிப்பிட்டார்

இந் நிகழ்வில் இலங்கையின் வர்த்தக பிரமுகர்களும் பங்கேற்றனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்தின் முன்னாள் பிரதமருக்கு தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை



(பாங்கொக்)

தாய்லாந்தில் பிரதமராக இருந்தவர் யிங்லக் ஷினவத்ரா. விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்த விவகாரத்தில் ஊழல் செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அரசுக்கு வெளிசந்தையை விட அதிக விலைக்கு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்தார்.

அதனால் விவசாயிகளுக்கு அரசால் பணம் செலுத்த முடியவில்லை.

மேலும் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளி ஜெனரல் தாவில் பிலன்ஸ்ரி என்பதை பதவி மாற்றம் செய்தார்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்து தேசிய ஊழல் தடுப்பு கமிஷனில் பிரதமர் ஷிங்லக் ஷினவத்ரா மீது வழக்கு தொடரப்பட்டது.

அதில் அவர் குற்றவாளி என நீரூபிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

எனவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

மேலும் இந்த வழக்கு தற்போது பாராளுமன்ற செனட் சபைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அங்கு ஊழல் குற்றம் புரிந்த யிங்லக் ஷினவத்ராவுக்குரிய தண்டனை முடிவு செய்யப்படும்.

இந்த வழக்கில் குற்றம் நிருபிக்கப்பட்டதால் அவர் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டு தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட இவர் தாய்லாந்தின் முதல் பெண் பிரதமர் ஆவார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் பெகுதாய் கட்சி சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார்.

2 ஆண்டுகள் 9 மாதம் மற்றும் 2 நாட்கள் பிரதமர் பதவியில் இருந்துள்ளார்.

இவரது அண்ணன் தக்ஷின் ஷினவத்ரா முன்னாள் பிரதமர்.

இவரும் ஊழல் வழக்கில் கடந்த 2006 ஆம் ஆண்டில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இராணுவ புரட்சியால் விரட்டியடிக்கப்பட்ட இவர் சிறைத் தண்டனையில் இருந்து தப்பிக்க வெளிநாட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

# கடத்தப்பட்ட மாணவிகளை மீட்க இராணுவம் செல்லாது

## அமெரிக்கா அறிவிப்பு

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் தனி நாடு கோரிக்கையை முன்வைத்து போகோ ஹரம் தீவிரவாதிகள் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி அங்கு ஒரு பள்ளிக்கூடத்தில் புகுந்து 200 மாணவிகளை கடத்திச்சென்று விட்டனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்து தகவல் இல்லாத நிலையில், அங்கு மேலும் 8 பெண்கள் கடத்தப்பட்டனர்.

இவர்களை மீட்பதற்காக அமெரிக்கா மீட்புக்குழுவை அனுப்பும் என தகவல்கள் வெளியாகின. ஆனால் இதில் அமெரிக்கா பின்வாங்கி விட்டது.

கடத்தப்பட்ட மாணவிகளை மீட்கும் பணியில் அமெரிக்க இராணுவம் ஈடுபடாது என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவ தலைமையகம் பெண்டகனின் செய்தி தொடர்பாளர் ஸ்டீவ் வாரன் நேற்று முன்தினம் கூறுகையில்.

நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவிகளை மீட்க இராணுவத்தை அனுப்பும் திட்டம் ஏதுமில்லை.

ஆனால் அங்கு ஒரு வல்லுநர் குழு அனுப்பி வைக்கப்படும்.

இந்தக் குழுவினர் தகவல் தொடரபு, உளவு அறிதல் உள்ளிட்டவற்றில் நபுணத்துவம் பெற்றவர்கள், கடத்தப்பட்ட மாணவிகளை சென்றடையும் விடயத்திலும், மீட்கும் விடயத்திலும நைஜீரியாவுக்கு இவர்கள் ஆலோசனை கூறுவார்கள் என தெரிவித்தார்.

இதற்கிடையே கடத்தப்பட்ட மாணவிகளை தீவிரவாதிகள் விடுவிக்க வேண்டும் என்று பாகிஸ்தானில் பெண் உரிமைக்காக போராடி வரும் மலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் சீன, வியட்நாம் கப்பல்கள் மோதல்

(பீஜிங்)

தென்சீன கடல் பகுதியில் இருந்து 193 கடல் மைல் தொலைவில் உள்ள நான்சா தீவை சீனாவும் வியட்நாமும் உரிமை கொண்டாடி வருகின்றன.

தற்போது முதல் முறையாக அங்கு எண்ணெய் துரப்பன வேலைகளில் சீனா ஈடுபட முயற்சிக்கிறது.

இதற்காக கப்பல்களை அந்த தீவுக்கு சீனா அனுப்பியது.

இதற்கு வியட்நாமும், பிலிப்பைன்சும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

மேலும், போர் கப்பல்களை அனுப்பி வியட்நாம் அரசு ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், ஹாப் மூன் என்ற கடற்பகுதியில் வியட்நாம் கடற்படை கப்பல் மீது சீன கப்பல்கள் நேற்று முன்தினம் நேருக்கு நேர் மோதின.

இதுகுறித்து வியட்நாம் அதிகாரிகள் கூறுகையில்,

உள்நோக்கத்துடன் வியட்நாம் கபபல் மீது சீன கப்பல்களை மோதி பிரச்சினையை சீனா பெரிதாக்குகிறது.

சர்ச்சைக்கு உரிய தீவில் எண்ணெய் துரப்பன வேலைகளில் சீனா ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது என தெரிவித்தனர்.

இதற்கிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 11 சீன மீனவர்களை பிலிப்பைன்ஸ் கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று சீனா மிரட்டல் விடுத்துள்ளது.

இதனால் வியட்நாம், பிலிப்பைன்ஸ், சீனா நாடுகளுக்கு இடையில் பதற்றம் அதிகரித்துள்ளது.



ஊழல் குற்றச்சாட்டில் தாய்லாந்து அரசியலமைப்பு நீதிமன்றம் பிரதமர் யிங்லக் ஷினவத்ராவை பதவி விலக உத்தரவிட்டது. பாங்கொக்கில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் கையசைத்த ஷினவத்ரா நிற்பதனை படத்தில் காணலாம்.

# சுதந்திரமாக வாக்கெடுப்பு நடைபெறும்

## போராளிகள் அறிவிப்பு



(டோநெட்ஸ்க்)

கடந்த ஆண்டு இறுதியில் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய இருந்த உக்ரைனின் திட்டம் கடைசி நேரத்தில் அந்நாட்டு ரஷ்ய சார்பு ஜனாதிபதி விக்டர் யனுகோவிச்சால் நிறுத்தப்பட்டது. அப்போது அங்கு தொடங்கிய மக்கள் போராட்டம் இன்னும் ஓயவில்லை.

மக்கள் எழுச்சியால் ஜனாதிபதி யனுகோவிச் பதவி விலகி இடைக்கால அரசு அமைத்து பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகளைக் கவனித்து வந்த வேளையில் அந்நாட்டின் ஒரு பகுதியான கிரிமியா ரஷ்யாவுடன் இணைய விருப்பம் தெரிவித்தது.

இத்திட்டத்தை அமெரிக்கா உட்பட பல மேற்கத்தேய நாடுகள் எதிர்த்தன.

ஆனால், கிரிமிய போராளிகளுக்கு ஆதரவாக தனது படைகளை அங்கு குவித்த ரஷ்யா கிரிமியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ஐ.நா.வுடன் சேர்ந்து அமெரிக்கா உட்பட பல நாடுகள் இதற்காக ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தன.

இருப்பினும், நிலைமை சீரடைவதற்குப் பதிலாக உக்ரைனின் கிழக்குப் பகுதியில் உள்ள பல பிராந்தியங்கள் ரஷ்யாவுடன் இணைவதற்குத் தயாராகி வருகின்றன.

அந்தப் பகுதிகளில் உள்ள பல நகரங்களில் செயற்பட்டுவரும் அரசு அலுவலகங்களை சிறைபிடித்துள்ள போராளிகள் ரஷ்யாவுடன் இணைவதற்கான சுதந்திர வாக்கெடுப்பு தங்கள் பிராந்தியங்களில் நடத்தப்பட வேண்டும் என்று கோரி வருகின்றனர்.

இதற்குப் பின்புலமாக ரஷ்ய அரசு செயற்பட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டை மீண்டும் மறுத்துள்ள ரஷ்ய ஜனாதிபதி போராளிகளையும் இந்தத் திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டார்.

உக்ரைன் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர ஒரு கலந்துரையாடலுக்கு அவகாசம் அளிக்கும்படியும் அவர் கூறினார்.

ஆனால் நேற்று முன்தினம் இதற்கு மறுப்பு தெரிவித்துள்ள போராளிகள் குறிப்பிட்டபடி ஸ்லவியான்ஸ்க் பிராந்தியத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று வாக்கெடுப்பு நடைபெறும் என்று தெரிவித்துள்ளனர்.

மே 11 ரஷ்யாவுடன் இணைவது குறித்த பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெறும் என்று டோநெட்ஸ்க் மக்கள் குடியரசு எனப்படும் சுய எழுச்சிப்பிரிவின் தலைவரான டெனிஸ் புஷிலின் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.




# சிரியாவில் குண்டு வெடிப்பு; கட்டடங்கள் தரைமட்டம்

(டமாஸ்கஸ்)

சிரியாவில், பிரபல ஹோட்டல் அருகே நிகழ்ந்த குண்டு வெடிப்பில், அந்த ஹோட்டலும், அதை சுற்றியுள்ள கட்டடங்களும் தரைமட்டமாயின.

கடந்த, 40 ஆண்டுகளுக்கும் மேலாக, சிரிய ஜனாதிபதியாக பதவி வகிக்கும், பஷர் அல் ஆசாத்தை, பதவி விலகக் கோரி, அங்கு போராட்டம் நடந்து வருகிறது.

இந்தப் போராட்டத்தில், அரசுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்து உள்ளனர்.



இரசாயன தாக்குதல் மற்றும் கொடூரமான முறையில், ஏராளமான குழந்தைகளும் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில், சிரியாவின் புராதன நகரமான, அலெப்பாவில் உள்ள கார்ல்டன் ஹோட்டல் அருகே, நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இதில், அந்த பகுதியில் உள்ள ஹோட்டல் உள்ளிட்ட, பல கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவனைக் கண்டு அஞ்சாதீர்கள்! உங்களின் நீடித்துழைக்கும் ஆற்றல் மட்டுமே அனைத்தையும் வெல்லும். - *ஜாக்கி கினிசன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஆளும் சந்தர்ப்பம் கிடைத்தால் எதுவும் செய்யலாமா?

வன்னிப் போர் தந்த இழப்புகளின் ஐந்தாம் ஆண்டின் நினைவுக்குரிய காலம் இது.

தனது பிள்ளை, சகோதரனை, கணவனை, பெற்றோரை இழந்தவர்கள் தமது உறவுகளின் நினைவுகளை மீட்பதென்பது அடிப்படை மனித உரிமை.

போர்க்களத்தில் உயிர் இழந்துபோன தன் பிள்ளையை நினைவு கூருகின்ற உரிமையை தந்தை, தாய் மற்றும் உறவினர்கள் இழந்திருப்பார்களாயின் அவர்கள் இன்னமும் அடிமைத்தனமான வாழ்வையே கொண்டுள்ளனர் என்பது தெளிவாகும்.

அடிப்படைத் தேவைகள் என்று நாம் வரையறுத்துக் கொள்வதற்குச் சமமான ஒன்றாக நினைவுகூரும் உரிமை கணிக்கப்படும்.

எனினும் எங்கள் நாட்டில் தமிழ் மக்கள் என்பதன் காரணமாக அவர்கள் தங்களின் உறவுகள் குறித்து நினைவுகூரும் உரிமையை இழந்துள்ளனர்.

இதனை மறுதலையாகக் கூறுவதாயின் நினைவுகூரும் உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது எனலாம்.

இலங்கைத் திருநாட்டில் நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழமுடியும். அவ்வாறான ஒரு வாழ்வை ஏற்படுத்துங்கள் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக இருந்தது.

ஆனால், இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த நாடு தங்களுக்கு உரியது என்று கருதினர். இக்கருத்தியல் அறியாமையும் அடாவடித்தனங்களும் கோலோச்சிய காலத்தில் ஏற்பட்டது என்ற அடிப்படையில் அவை குறித்து மறப்பு நிலைக்கு வரலாம் என்றால்,

இன்றும் அதே நிலைப்பாட்டை தென்பகுதி ஆட்சிக் குழுமம் கொண்டிருப்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

வன்னிப் போரில் உயிரிழந்த படையினரின் நினைவு மையங்களை வட பகுதியில் அமைத்து அவற்றை தென்பகுீதி மக்கள் பார்வையிட்டு அஞ்சலித்து செல்கின்றனர்.

அவ்வாறு அஞ்சலித்துச் செல்வது தமக்கான உரிமை என்று கருதுகின்ற ஆட்சித் தரப்பும் பெரும்பான்மை இனமும் வடபகுதியை தாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் தங்கள் உறவுகளுக்கான அஞ்சலியை தங்களின் மண்ணில் செலுத்துவதற்கு தடை விதிப்பது எந்த வகையில் நியாயமாகும்?

இத்தகைய கடும்பிடித்தனங்கள் இன ஒற்றுமைக்கோ அல்லது நாட்டின் இறையாண்மைக்கோ ஆரோக்கியமானதல்ல.

இலங்கையின் ஆட்சித் தலைவர்கள் பேசுவதுபோல இலங்கை எல்லா மக்களுக்கும் உரிய நாடு என்றால், எல்லா மக்களும் சம உரிமை உடையவர்களாக இருக்கவேண்டும்.

ஆனால் இங்கோ பேச்சு ஒன்றாகவும் செயற்பாடு இன்னொன்றாகவும் இருப்பதைக் காணமுடியும்.

ஆனையிறவில் நினைவுத் தூபி ஓங்கி நிற்க முடியும் என்றால், போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்காக முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி எழுந்து நிற்பதில் என்ன தவறுண்டு?

எனக்கொரு நீதி; உனக்கொரு நீதி என்ற வேற்றுமைத்தனங்களை வேரோடு புரட்ட வேண்டும்.

இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் உரிமைகள் சமத்துவமாக அமைய வேண்டும்.

ஆளும் சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைத்தது என்பதற்காக தமிழ் மக்களை நிந்திப்பது; இந்த நாட்டில் ஒற்றுமையை, அமைதியை விரும்புபவர்களின் செயலாக அமையாது என்பது மட்டும் உண்மை.

# புகையிலை பயன்பாட்டினால் நாளொன்றுக்கு 55 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை பயன்பாட்டினால் நாளொன்றுக்கு 55 பேர் உயிரிழப்பதாக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய புள்ளிவிபரத் தகவல்களின் அடிப்படையில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 30 வீதமான ஆண்களும், 4 வீதமான பெண்களும் புகை பிடிக்கின்றனர்.

புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை பயன்பாட்டினால் ஆண்டு தோறும் 20 ஆயிரம் பேர் வரையில் உயிரிழக்கின்றனர்.

18 வயதுக்கு குறைந்த சிறுவர்களை புகைப் பழக்கத்திலிருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெளிநாடுகளில் புகைப்பிடித்தல் காரணமாக நோய் ஏற்படும் நபர்கள் நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்து நட்டஈடு பெற்றுக்கொள்கின்றனர்.

இலங்கையிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை விடவும் புகைப்பிடித்தல் காரணமாக உயிர்கள் காவுகொள்ளப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புகைத்தல் பழகத்தை இல்லாதொழிக்க கட்சி, மத, இன பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

சிகரட் பக்கட்டுக்களில் படங்களின் மூலம் எச்சரிக்கையிடுவது சுற்றுலாத் துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## நல்லைக்குமரன் மலர் வெளியீட்டிற்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக்குழு 2014 ஆம் ஆண்டுக்கான 22 ஆவது மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுவதாக சைவசமய விவகாரக் குழு தலைவரும் மாநகர சபை ஆணையாளருமான செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கட்டுரைகள் 5 தொடக்கம் 7 வரையான பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும். அத்துடன் ஏற்கெனவே மலரில் வெளிவந்த கட்டுரைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆக்கங்களை அனுப்பும்போது இடதுபக்க மேல் மூலையில் **நல்லைக் குமரன் மலர் 22** எனக் குறிப்பிட்டு பிரதம பதிப்பாசிரியர், நல்லைக்குமரன் மலர் 22, இல.21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு எதிர்வரும் யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மின்னஞ்சல் மூலம் அனுப்ப விரும்புவோர் nallaivijayan@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அத்துடன் கட்டுரைகளை இறுவட்டுக்களில் அனுப்புவது சிறந்ததாகுமென யாழ்.மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## கரவெட்டி பிரதேச செயலக தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

ரோனர் மீள் நிரப்புகை மற்றும் திரவ சவர்க்காரம் உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சிநெறி கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திரவ சவர்க்கார உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சியும் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ரோனர் மீள் நிரப்புகை தொழில்நுட்ப பயிற்சி நெறியும் நடைபெறவுள்ளன.

குறித்த பயிற்சி நெறிகளுக்கு பதிவு செய்யப்பட்ட பயனாளிகளும் பங்கு பற்ற விரும்பும் பயனாளிகளும் வார நாட்களில் மேற்குறித்த நேரத்தில் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வளநிலைய கேட்போர் கூடத்திற்கு வருகை தருமாறு கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (2)

## அன்னையர் தின நிகழ்வு

(கோண்டாவில்)

வாகீஸ்வரி சனசமூக நிலையம் நடத்தும் அன்னையர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலாசார மண்டபத்தில் ஸ்ரீவாகீஸ்வரி முன்பள்ளி ஆசிரியர் றுஷானி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாகண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் சந்திராதேவி சுபாஸ்சந்திரன், நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ரஜனி குமாரசிங்கம், கோண்டாவில் மத்தி ஜே/118 கிராமசேவையாளர் குணரஞ்சிதம் பிரதாபராஜன், நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் மாலினி விவேகானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் கவிதாவரன் கலந்து கொள்வார்.

அன்றையதினம் காலை 9 மணிக்கு குருதிக்கொடை வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென்கோவை அருள்மிகு கற் பகப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங் கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்ததிருவிழாவும் இடம்பெறுமென ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



பகவான் எந்தெந்த வழிகளில் தாங்கள் எங்களுடன் தொடர்பு கொள்கிறீர்கள்? நாங்கள் எப்படி அவைகளைத் துல்லியமாக உணர்ந்து கொள்வது?

நான் உங்களுடன் பேசுவதன்மூலமாக பெரும்பாலும் தொடர்பு கொள்கிறேன். நான் பேசுவதை நீங்கள் கேட்கமுடியும். சில சமயங்களில் காட்சிகள் மூலமாகவும் பலமான உள் உணர்வுகளின் ரூபமாகவும் தொடர்பு கொள்கிறேன். நான் தொடர்புகொள்ளும் போதெல்லாம் உங்களுடைய இருதயப் பகுதியில் ஒரு நல்ல உணர்வை, ஒரு விதமான அமைதி அல்லது ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள். இந்த மாதிரியான உணர்வுகள் இல்லாவிட்டால் அது உங்களுடைய உள்மனது உங்களுடன் கொண்ட தொடர்பாக இருக்கட்டும்.

நான் பேசும்போதெல்லாம் உங்கள் உடல் நிலையைக் கவனிப்பதற்குப் பயிற்சி செய்து பழக்கப்படுத்திக் கொண்டால் அதில் இலேசான சில மாற்றங்கள் நிகழ்வதை உணர்வீர்கள். இந்த உடல் நிலை மாற்றங்களையும் நான் உள்ளே பேசுவது அல்லது தொடர்பு கொள்வதையும் இணைத்துப் பார்க்கத் தொடங்கினால் கொஞ்சம் கொஞ்சமாக முயற்சியின்றி என்னுடன் தொடர்பு கொள்வதில் நிபுணர் ஆகிவிடுவீர்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மீகமே நமது உயிர்



- நீங்கள் ஒவ்வொருவரும் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.
- ஆகாயத்தின் இடியோசையைக் கேட்டும் பயப்படாதீர்கள். துணிச்சலுடன் எதிர்த்து நின்று போராடுங்கள்.
- உண்மை, நேர்மை, அன்பு இந்த மூன்றும் ஒருவரிடம் இருக்குமானால் அவரைத் தடுத்து நிறுத்தும் சக்தி உலகில் வேறு யாருக்கும் கிடையாது.
- கடினமான சொல் எதையும் சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு இதயங்களைத் திறந்து வையுங்கள்.
- மூ ஆன்மிகத்தைப் புறக்கணித்துவிட்டு, மேலைநாட்டு நாகரிகத்தின் பின்னால் சென்றால், நம் சமூகமே அழிந்து போகும்.
- ஆன்மிகம் என்னும் அஸ்திவாரத்தின் மீது தான் நம் நாடு என்னும் கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. இந்த உண்மையை கவனத்தில் கொள்ளுங்கள்.
- கர்வம் தலை தூக்கி நின்றால் நம்மால் எந்தச் செயலையும் சாதிக்க முடியாது. முதலில் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பர்களின் துடுப்பாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்கும் இடையிலான நண்பர்களின் துடுப்பாட்டப் போட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொடரை யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.இளங்கோவும் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி அதிபர் பி.கே.சிவலிங்கமும் தலைமை தாங்க பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜ், சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் சட்டக் கல்லூரி மாணவருமான கே.அருள்செல்வன், கௌரவ விருந்தினராக பிரதேச கல்வி அதிகாரி ஏ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பருத்தித்துறை இளைஞர் கழக உதைபந்து; விண்மீன் இளைஞர் கழகம் சம்பியன்



பருத்தித்துறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் விண்மீன் இளைஞர் கழகம் சம்பியனாகியது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் விண்மீன் இளைஞர் கழக அணியும் வல்வை இளைஞர் கழக அணியும் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன.

ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் விண்மீன் இளைஞர் கழக அணியைச் சேர்ந்த யூட் கென்னடி மூலை உதை மூலம் நேரடியாக கோலொன்றினைப் போட்டார். இதனால் முதற்பாதியாட்டம் நிறைவு பெறுகையில் விண்மீன்இளைஞர் கழக அணி 1:0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் கிடைத்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கிய விண்மீன் இளைஞர் கழக அணியின் டேமியன் 36ஆவது நிமிடத்தில் கோலொன்றினைப் போட்டார்.

இரண்டாவது பாதியில் கோல் பெறும் முனைப்பை வல்வை இளைஞர் கழக அணி அதிகரித்தது. எனினும் கோல் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் இப் போட்டியில் 2:0 என்னும் கோல் கணக்கில் விண்மீன் இளைஞர் கழக அணி வென்று பருத்தித்துறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டிற்கான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாகியது. (க-23)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி; மானிப்பாய் இந்து சம்பியன்





பரபரப்பான இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் இரண்டாமிடத்திற்கு தள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகியது. வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டது.

இளையாணன் அ.த.க. பாடசாலை மைதானத்தில் அண்மையில் இப் போட்டி இடம் பெற்றது. இறுதியாட்டத்தில் பலமிக்க அணிகளான வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமாகிய இப்போட்டியில் ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே போட்டியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியினர் அதிரடியாக ஆடி முதலாவது கோலினைப் போட்டபோது அக் கோலானது நடுவரின் தீர்ப்பால் முறையற்ற கோல் என வழங்கப்பட்டது.

ஆனாலும் தொடர்ந்து ஆட்டம் இடம்பெற்ற போது இரு அணியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது பலமாக மோதிக் கொண்டிருந்த வேளையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியினர் தமக்குக் கிடைத்த மூலை உதையினை பயன்படுத்தி அடுத்தடுத்து இரண்டு கோல்களினைப் பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு கோல் போடுவதற்காக பல முனைகளாலும் முயற்சிகளை மேற்கொண்ட வயாவிளான் மத்திய மகா வித்தியலாய அணியினர் முதலாவது கோலினை போட்டு எதிரணிக்கு அதிர்ச்சி கொடுத்தனர்.

ஆனாலும் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியினர் தமது வெற்றியினைத் தக்க வைப்பதற்காக கடும் போராட்டத்தினை மேற்கொண்டனர். இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்தினை நெல்லியடி மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது. (க-23)

# பொற்பதி இந்து வி.கழகத்தை வீழ்த்தியது குருநகர் கார்மேல் போய்ஸ் அணி

பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி குருநகர் கார்மேல்போய்ஸ் அணி சம்பியனாகியது.

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான 40 அணிகள் பங்கு பற்றிய மாபெரும் மென்பந்துசுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அரியாலை ஸ்டான்லி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் ஜெயதீபன் கலந்து கொண்டார். குரு நகர் கார்மேல்போய்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் மோதியது.

இறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் களத்தடுப்பை தேர்வு செய்தது முதலில் துடுபெடுத்தாடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி 5 பந்து பரிமாற்றத்தின் முடிவில் ஒரு இலக்கை இழந்து 33 ஓட்டங்களை பெற்றனர். இதில் அதிக ஓட்டங்களாக அஜன் ஒரு 6 ஓட்டங்கள் அடங்கலாகவும் ஒரு 4 ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்டங்களையும், தேசிகன் ஒரு 6 ஓட்டங்கள் அடங்கலாக 6 ஓட்டங்களையும், செல்டன் 3 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கோபி ஒரு பந்து பரிமாற்றங்கள் வீசி 3 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கை சாய்த்தார்.

34 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் 2 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 18 ஓட்டங்களை பெற்றிருந்தது. மேலும் 3 பந்து பரிமாற்றத்தில் 16 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நோக்கத்துடன் துடுப்பெடுதாடியது பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம். 3 ஆவது பந்து பரிமாற்றத்தில் அஜன் 4 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கை கைப்பற்றினர். 12 பந்துகளில் 12 ஓட்டங்களை பெற்றால் வெற்றி பெரும் வாய்ப்பில் இருந்தது பொற்பதி இந்து வி.க. அடுத்த பந்து பரிமாற்றத்தில் அலனின் பந்துவீச்சில் 5 ஓட்டங்களை பெற்று மற்றும் ஒரு இலக்கை இழந்தது பொற்பதி விளையாட்டுக்கழகம். 2 இலக்குகள் மீதம் உள்ள நிலையில் 6 பந்துகளில் 7 ஓட்டங்களை பெற்றால் கோப்பையை தன்வசமாகலாம் என்ற நிர்ப்பந்தத்தில் துடுப்பெத்தாடி கொண்டிருந்தது பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம்.

இறுதி பந்து பரிமாற்றத்தினை வீசுவதற்காக குருநகர் கார்மேல்போய்ஸ் அணித் தலைவர் செல்டன் அவர்கள் அழைக்கப்ட்டார். அணித்தலைவர் மிக நுட்பமான பந்து வீச்சில் முதல் பந்திலேயே றுக்மன் தேசிகனிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்த பந்திலேயே ஜெதேவன் விக்கெட் முறையில் ஆட்டமிழந்தார் பொற்பதி இந்து வி.க. சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களை மட்டுமே பெற்று இதில் அதிக ஓட்டங்களாக றுக்மன் ஒரு 6 அடங்கலாக 11 ஓட்டங்களையும், கோபி 5 ஓட்டங்களையும், சுபாஸ் 5 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் செல்டன் 0.2 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 2 இலக்குகளையும் அஜன் 1 பந்து பரி மாற்றங்கள் வீசி 4ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்குகளையும், அலன் (வையா) ஒரு பந்து பரிமாற்றத்தினை வீசி 5 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கையும், றொக்சன் ஒரு பந்து பரிமாற்றத்தினை வீசி 11 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கையும் சாய்த்தனர். இதன் மூலம் குருநகர் கார்மேல்போய்ஸ் அணி சம்பியன் ஆனது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குருநகர் கார்மேல்போய்ஸ் அணியின் செல்டன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர் ஆட்ட நாயகனாக கார்மேல் போய்ஸ் அணியின் அஜன் தெரிவு செய்யப்பட்டார்

இப்போட்டியின் பரிசளிப்பு விழா எதிர் வரும் 14 திகதி நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவில் இசை நிகழ்ச்சியுடன் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. (க-23)

# JPL இன் இன்றைய போட்டி

யுவர் பிரண்ட் பவுண்டேசனால் நடத்தப்படும் ஜப்னா பிரிமியர் லீக் இன்று யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

[illegible] போட்டியில் கே.சி.சி.சி அணியினை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி [illegible] 10 மணிக்கு களமிறங்கவுள்ளது. அதனை தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு சென்றலைட்ஸ் அணியினை எதிர்த்து நியூ ஸ்டார்ஸ் அணி களமிறங்கவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ அடக்கு...

'யளவில் சந்தித்து கலந்துரையாடியது இதன்பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை யாழ்.கோவில் வீதியில் உள்ள அவரது வாசஸ்தலத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியது.

இதன்பின்னர் யாழ்.மருதடி வீதியில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் பி.ப 3.00 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசாவினையும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புகள் மற்றும் நபர்கள் தொடர்பில் இந்திய அரசு தவறான முடிவினை எடுத்துள்ளதாக அறிய முடிகின்றது.

அதாவது இந்த அமைப்புக்கள் மீதான தடையை இந்திய அரசும் அங்கீகரித்துள்ளதாக அறிய முடிகின்றது.

அவ்வாறு செய்தது ஏன் எனக் கேள்வி எழுப்பி இருந்தோம். இதற்கு பதிலளித்த அவர், அந்தத் தடையை இந்திய அரசும் அங்கீகரிக்கவில்லை, இலங்கை அதனை எம்மிடம் கேட்கவில்லை. நாமும் தடையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் பதிலளித்தார்.

இதேவேளை புலம்பெயர் அமைப்புக்களை தடை செய்வதாக எந்தவொரு தீர்மானத்தையும் இந்தியா இதுவரை எடுக்கவில்லை என்றும் கூறினர்.

இதேவேளை வலி.வடக்கு, சம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம் இதுவரை இடம்பெறவில்லை. ஆனால் இராணுவ காணி சுவீகரிப்பு நடவடிக்கையை தமிழர் தாயகத்தில் அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இராணுவம் பலவந்தமாக தமிழரின் காணிகளை சுவீகரித்து வருகின்றது. வலி. வடக்கில் மட்டும் 40 ஆயிரம் பேர் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளது.

வடக்கைப் பொறுத்தவரை மீள்குடியேற்றம் என்பது மிகவும் மந்த கதியில் இடம் பெறுகின்றது அரசு வடக்குமாகாண சபையையும் உரிய அதிகாரங்களைக் கொடுத்து இயங்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இல்லை.

பலமுட்டுக்கட்டைகளை வடக்குமாகாண சபைக்கு அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றது.

**அரசியல் தீர்வு**

13-வது திருத்தச் சட்டத்தை தமிழர்களின் தீர்வாக நாம் ஏற்கவில்லை அது தமிழர்களுக்கு நிரந்தர தீர்வாக அமையாது. எனவே நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தர இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை இந்திய உயர் அதிகாரியிடம் வலியுறுத்தியிருந்தோம். இதற்கு அவர் ஒரு பதிலையும் கூறவில்லை. இருப்பினும் எமது கருத்தை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

**காணிப் பிரச்சினை**

வடக்கில் இராணுவம் நிலை கொண்டுள்ளதாலும் நாட்டில் இருந்து யுத்தம் காரணமாக புலம்பெயர்ந்த மக்கள் இராணுவ அச்சுறுத்தலைக் கண்டு அஞ்சுவதாலும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உள்ளவர்கள் நாட்டுக்கு திரும்பி வர தயக்கம் காட்டுகின்றனர்.

வட பகுதியில் இருந்து சென்றவர்கள் இங்கு வர இந்தியா விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக மீள்குடியேற்ற தடைகள் ஏற்பட்டுள்ளது.

**இந்திய வீடு**

இந்திய வீட்டுத்திட்டம் ஆரம்பித்து 5 வருடம் ஆகியும் பூர்த்தியாகவில்லை. இதேவேளை இந்தியாவில் என்றால் 5 மாதத்தில் முடிவுற்றிருக்கும். ஆனால் இங்குள்ள தடைகள் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மைதான் தாமதத்திற்கு காரணம் என்றாலும் மக்களின் தேவைகள் பூர்த்தியாக்கப்படாமல் உள்ளது வருத்தமளிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக எடுத்துக் கூறப்பட்டதாக அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். (செ-6)

# தமிழர்களின் எதிர்ப்பு எதிரொலி
# ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள்
# தமிழகத்தில் இருந்து இடமாற்றம்

(சென்னை)

சென்னையில் நடக்கவிருந்த ஐ.பி.எல் போட்டிகளை தமிழகத்தில் இருந்து இட மாற்றியது பிசிசிஐ.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் மே 18-ம் திகதி சென்னை சுப்பர் கிங்ஸ்-பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. 22-ம் திகதி சென்னை அணி ஐதராபாத அணியை எதிர்கொள்கிறது. இதுதவிர மே 27 மற்றும் 28-ல் அரையிறுதி போட்டிகளும் இங்கு நடைபெறுகின்றன. இந்த 4 போட்டிகளும் ராஞ்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சேப்பாக்கம் மைதானத்தின் கேலரிகள் திறப்பு தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும், இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடக் கூடாது என்று தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதன் காரண்மாக போட்டிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. மே 18 நாளில் போட்டி நடைபெறக்கூடாது என்றும், இலங்கை கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் எவரும் தமிழகத்திற்கு வரவேண்டாம் என்றும் அரசு அறிவுறுத்தியது. இதைக்கருத்தில் கொண்டு ஒரேயடியாக எந்த போட்டிகளையும் தமிழகத்தில் நடத்தப் போவதில்லை என்று கிரிக்கெட் சபை முடிவெடுத்தது. (செ-11)




# மன்னார் மனித...

தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்எனவும், குறித்த புதைகுழி தோண்டப்பட்ட பகுதியில் கடந்த காலங்களில் கிணறு ஒன்று காணப்பட்டுள்ளது.

குறித்த கிணறு தற்போது மூடப்பட்டு அடையாளம் தெரியாத வகையில் உள்ளது.

குறித்த கிணறும் தோண்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை காணாமல் போனவர்களது உறவினர்கள் சார்பாக சட்டத்தரணிகள் நீதவானிடம் விண்ணப்பம் செய்தனர்.

இதன்போது இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை செய்து மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதோடு அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பிலும் அவை தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார்.

புதைகுழி தோண்டப்பட்டபோது அங்கு பிரசன்னமாகியிருந்த விசேட குற்றப் புலனாய்வுப்பிரிவு அதிகாரியையும் மன்றில் ஆஜராகுமாறு நீதவான் ஆணை பிறப்பித்தார்.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது மன்னார் பொலிஸார் மற்றும் விசேட குற்றப்புலனாய்வுப்பிரிவினர் மன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

மீண்டும் வழக்கு விசாரணை எதிர்வரும் யூன் மாதம் 9 ஆம் திகதி விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வடக்கு மாகாண...

மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணிதொடக்கம் 3 மணிவரை யாழ்.கோவில்வீதியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடிய இந்தியக்குழுவினருடனான சந்திப்பில் முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு நிரந்தர வீடுகள் தேவைப்படுகின்றன. வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. வேலைவாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினால் இங்குள்ள இளைஞர் யுவதிகள் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டு பொருளாதார ரீதியில் அவர்களை முன்னேற்றவேண்டியுள்ளது.

மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள பெரும் தடைகள் ஏற்பட்டுள்ளன. இந்தியா 50 ஆயிரம் வீடுகளை அமைத்து தர முன்வந்துள்ள போதும் வீடுகள் போதுமானதாகயில்லை என்றும் மேலதிகமாக 20 ஆயிரம் வீடுகளைக் கட்டித்தர இந்தியா முன்வர வேண்டும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-6)

# ஊடகவியலாளர்...

குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர். இந்தச்சந்திப்பு குறித்து செய்தி சேகரிக்க யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் கொழும்பைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் அங்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் முதலமைச்சருக்கும் இந்திய வெளிவிவகார அதிகாரிகள் குழுவினருக்குமான சந்திப்பு முடிவுற்றதும் முதலமைச்சரின் வாசஸ்தலத்திலிருந்து வெளியில் வந்த குழுவினரை ஊடகவியலாளர்கள் புகைப்படம் எடுக்க முயற்சித்தபோது அங்கு சிவில் உடையில் திடீரென பிரசன்னமான நபர் ஒருவர் பொலிஸார் முன்னிலையில் ஊடகவியலாளர்களை மிகவும் அநாகரிகமான முறையில் நடத்தியதோடு அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றும் நடவடிக்கையிலும் ஈடுபட்டார்.

இதேவேளை ஊடகவியலாளர் ஒருவரின புகைப்படக்கருவியும் சேதத்திற்குள்ளானது. அத்தோடு ஊடகவியலாளர்களை பலவந்தமாக வெளியேற்ற முயற்சித்த குறித்த நபர் ஊடகவியலாளர்களை திடீரெனத்தள்ளியதில் நிலைகுலைந்து போன ஊடகவியலாளர்கள் அவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை மேற்படிச் சம்பவமானது சாதாரணமானது (சின்னப்பிரச்சினை) என்றும் ஊடகவியலாளர்களை பலவந்தமாக வெளியேற்ற முயற்சித்து அநாகரிகமாக நடந்து கொண்டநபர் முதலமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்றும் கொழும்பிலிருந்து தற்போதுதான் வந்துள்ளார் என்றும் முதலமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் மன்மதராஜா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை மேற்படிச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர்கள் சார்பில் நேற்று மாலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## இயல் இசை நாடக விழா

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி (63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.) நடத்தும் இயல் இசை நாடக விழா எதிர்வரும் 13-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதி வரை தொடர்ந்து ஐந்து நாட்கள் மாலை 4.00 மணி முதல் நடைபெற உள்ளது.

மேற்படி நிகழ்வில் தினமும் மங்கள இசை, மதுரகானம், விரலிசை, வேணுகானம், நாத சமர்ப்பணம், நடனங்கள் பட்டிமன்றம், வில்லிசை, நாடகங்கள், கூத்துக்கள் போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

இவற்றிற்கு பிரதம விருந்தினராக சீ.வீ.கே.சிவஞானம், சிவலிங்கராஜா, திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து சிறப்பிப்பதோடு பங்கு பற்றி சிறப்பித்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு நடைபெறும்.

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியினர் அழைத்துள்ளனர். நிகழ்விற்கான அனுமதி இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# முள்ளிவாய்...

கத்தை சார்ந்தவர்கள் மட்டும் அல்ல, சாதாரண பொது மக்களும் பெருந்தொகையில் கொல்லப்பட்டார்கள்.

இறந்துபோன அனைவரையும் நினைவு கூரும் உரிமை அவர்களது குடும்ப உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், வடக்கின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் உண்டு. அதை எவரும் தட்டி பறிக்க முடியாது.

இது சம்பந்தப்பட்டவர்களின் அடிப்படை மனித உரிமையாகும். இந்த உரிமை வழங்கப்படவேண்டும் என இந்த அரசாங்கத்தின், கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள சிபாரிசுகளிலேயே கூறப்பட்டுள்ளது.

இந்த அரசாங்க தலைமை இந்த நாட்டு பிரச்சினையை ஜெனிவாவுக்கு கொண்டு சென்று ஒரு முன்மாதிரியை 1989-ல் காட்டியது. அதுபோல் அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கும் முன்மாதிரியும் தெற்கில் இருந்து தான் முழு நாட்டுக்கும் முதன்முதலில் கிடைத்தது. ஆயுத கிளர்ச்சியாளர்களை நினைவுகூரும் நிகழ்வுகளையும் தெற்கில் தான் நடத்தப்பட்டு, முழுநாட்டுக்கும் முன்மாதிரி காட்டப்பட்டது.

ஆனால் இவை அனைத்தும் தெற்கில் நடக்கும் போது இணக்கப்பாட்டை தெரிவிப்பவர்கள், அவை வடக்கில்நடைபெறும் போது மாத்திரம் கடுமையாக விமர்சனம் செய்து, எச்சரிக்கை விடுத்து, பல்கலைக்கழகங்களை மூடிவிடும் அளவுக்கு போகின்றார்கள். இது இந்த நாட்டில் இரண்டு வித நியாயங்கள் நடைமுறையில் இருப்பதை காட்டுகின்றன.

மாண்டுபோன தமிழீழ விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களையும் நினைவு கூர அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும், நண்பர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் முழுமையான உரிமை உண்டு.

தெற்கிலே அரசாங்கத்தை எதிர்த்து ஆயுதம் தூக்கிய தேசபிரேமி கிளர்ச்சியாளர்களின வரலாற்றை கடந்துதான் ஜேவிபி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை பகிரங்க அரசியலுக்கு வந்துள்ளன. அந்த கிளர்ச்சியாளர்களை நினைவு கூரும் அரசியல் நிகழ்வுகளை இந்த கட்சிகள் இப்போதும் தெற்கில் நடத்துகின்றன.

இதன்மூலம் ஆட்சியை பிடிக்க ஆயுதம் தூக்கும் கொள்கையை ஜேவிபி, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி என்பவை ஏற்கின்றன என புரிந்து கொள்ள முடியுமா? அவ்வாறே வடக்கில் கொல்லப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவு கூரும் உரிமை வடக்கின் மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கின்றது.

இது அவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கின்றார்கள் என்று அர்த்தப்படாது என மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

LED LED LED LED LED
TCT Multi Trade Centre
இலும் (527, நாவலர் வீதி, யாழ்)
ஜெகன் களஞ்சியம் (447, கே.கே.எஸ் றோட், யாழ்)
இலும் Double Energy Saving Para Lights HiGreen LED Bulbs (Pin Type மட்டுமே இப்போது உள்ளது)
விற்பனையாகின்றது!
மொத்த கொள்வனவிற்கு,
[illegible]
(8315)



# கண்ணீர் அஞ்சலி



**S.K.சிவலிங்கம்**

ஸ்ரீ அம்மா பகவானின் சேவகனாகத் தன் வாழ்நாளைஅர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த S.K.சிவலிங்கம் ஜி (சுழிபுரம் மேற்கு) அவர்களின் ஆத்மா பரம்பொருளோடு ஐக்கியமாக எல்லாம்வல்ல ஸ்ரீ பரமாத்ம பகவதி பகவானை வேண்டுகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் சுவர்ணயுக ஆலய சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஒன்றியம்
யாழ்.மாவட்டம்

(சி-7314)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் வரு...

வரையிலான ரயில் சேவைகடந்தஆண்டு செப்ரெம்பர் மாதம் 14-ம் திகதி ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்டன.

இதைதொடர்ந்து அதிவேகத்திற்கான ரயில் பாதை புனரமைக்கப்பட்ட நிலையில் மீசாலை, மிருசுவில், சாவகச்சேரி வரையிலான பகுதிகளின் வேலைத்திட்டங்கள் முடிவடைந்துள்ளன.

தற்போது நாவற்குழி, யாழ்ப்பாணம் பகுதி வரையான வேலைத்திட்டங்கள் துரிதகதியில் இடம் பெற்று வருகின்றன.

எதிர்வரும் யூன் மாதத்தில் பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரைபுகையிரதசேவைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை புகையரதத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-11)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு : 0213210815, 0215671532

**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC Computer Repair
52,Hospital Road,Jaffna. (C-7333)

**LATVIA நாட்டில் படிப்பதற்கும் மாதாந்தம் 2,50,000 வரை உழைப்பதற்கும் க.பொ.த (உ.த) இல் 3 பாட சித்தி போதுமானது.**
LATVIA நாட்டில் கல்விகற்பது மட்டுமல்லாது பிரான்ஸ், சுவிஸ்,ஜேர்மன், நோர்வே, இத்தாலி போன்ற நாடுகளிற்கு விடுமுறைக்காலங்களில் சென்றுவரக்கூடிய சந்தர்ப்பம்
SPOT ADMISSION in Jaffna. 12,13th of May, 2014
CONTACT 0779265447 0217200989 (Please call at 9am - 5pm)
**லண்டன் நாட்டில் கல்விகற்க...**
- G.C.E O/L இல் சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- 5 வருடகால அனுபவம்மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
- இலவசமாக நேரில்வந்து சட்டஆலோசனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்.
- 150 இற்கும் அதிகமான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
- IELTS & A1,B1 Special வகுப்பு ஒழுங்குகள்

மகத்தான பொன்னான சந்தர்ப்பம்
(C-7318)
WEC (VISA CONSULTING OFFICE) Chavakachcheri, Jaffna. Gov.reg no-TN/DS/UC/0324
City&Guilds Approved Centre (UK)

**Dutch, Deutsch, French**

தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
★ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
★ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
★ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
★ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(C-7323)
**Vivekananda Academy** அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
- கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ (இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழில் 1976 முதல்) கிளைநிறுவனங்களுடன் சர்வதேச வலையமைப்பை கொண்டு FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது.
- எமது உயர் தகைமையுடைய பல ஆசிரியர்கள் மாணவர்களின் பேச்சு ஆற்றலை விரைவாக உறுதிப்படுத்துகிறார்கள்.
- வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராட்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள்.
- Certificates & International Diplomas(DELF A1,A2)
- திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர் விரையுங்கள்

இன்றே பதிவுசெய்யுங்கள்... புதிய வகுப்புகள் மிக விரைவில்...
வடமாகாணத்தில் ஒரே முகவரிதான்...
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
குறிப்பு: இவ்வீதியில புகையிரத பாதையை அடுத்துள்ள சந்தியில
(6329)

**வருந்துகின்றோம்!**
01.05.2014 அன்று ஆரம்பமாகிய வணிகக்கல்வி தொடர் கருத்தரங்கிற்கு பல மாணவர்களுக்கு அனுமதி வழங்காது திருப்பி அனுப்பியதற்காக மனம் வருந்துகின்றோம்
அனேக பெற்றோர்கள் மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு சில அனுமதிகள் அடுத்த கருத்தரங்கிலிருந்து வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்
வணிகக்கல்வி கருத்தரங்கு - 2014 V.முரளி நிர்வாகம் - D.C.M
(C-7335)

**O/L, A/L இன் பின்னர்**
வெளிநாட்டு (UK, Australia, New Zealand, Malaysia...) அல்லது உள்நாட்டு பட்டப்படிப்பா? தொழிற்கற்கையா?
**உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு**
மாணவர்கள் மற்றும் பெற்றார்கள் கலந்து பயன்பெறுங்கள்
காலம் : 12ம் திகதி திங்கட்கிழமை
நேரம் : காலை 9 மணி
இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
அனுமதி இலவசம்
ஏற்பாடு:
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
தகவல்களுக்கு : 0777 102 131
Jaffna Campus: 16, Point Pedro Road, Jaffna.
(C-7334)

SPEED LANKA EXPRESS

**வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை**
- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(C-7243)
**ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்**
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926 www.speedlanka.net

**இப்போது 50% கட்டண கழிவுடன்**
விரும்பிய நாட்டில் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுத்தரும் Student Visa/Work Permit ஏற்பாட்டுடனான
**வெளிநாட்டு Hotel Management**
(வருமானத்துடனான கற்கை)
**15 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட விசா சேவை வல்லுனர்களின்**
**Student Visa - Work Permit - Skilled Migration - PR சேவைகள்**

| | |
|---|---|
| கனடா | Doctors, Nurses, Accountants, Engineers, IT Professionals, Senior Managers, University Lecturers உள்ளிட்ட 50 பணிநிலைகளுக்கான 25,000 வெற்றிடங்கள். (கனேடிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற முகவர் மூலமான நம்பிக்கையான சேவை) |
| அவுஸ்ரேலியா / நியூசிலாந்து | 644 வகையான தொழில் வெற்றிடங்கள் / Student Visa / PR |
| A/L 3S உடன் | France, Germany, Switzerland, Italy, Latvia உள்ளிட்ட 26 நாடுகளுக்கான செங்கன் விசா |
| O/L சித்தியுடன் | UKக்கு 4 வருட விசா (Universities / Colleges) |

**ஒவ்வொரு கட்டத்துக்கும் உத்தியோகபூர்வ ஆவணங்களைப் பெற்று கட்டம் கட்டமாகக் கட்டணத்தைச் செலுத்தும் நாணயமான சேவை!**
(C-7336)
சிகரம் Sikaram Gateway to Education & Employment
TakeOff your dreams கனவுகளுக்கு இறக்கை கட்டுவோம்
மேலதிக விபரங்களுக்கு: www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி, இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்


## யாழ்.பல்...

இப் போராட்டம் நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ். பல்கலை வளாகத்தினுள் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி உதய பெரேராவுடனான சநதிப்பினையடுத்து யாழ். பல்கலைக்கழகம் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை மூடப்படும்என நேற்று முனதினம்பல்கலை நிர்வாகம் அறிவித்திருந்தது.

இவ்அறிவிப்பினையடுத்தே பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம பல்கலைக்கழகத்தின சுயாதீனத்தை உறுதிபபடுத்தக் கோரியும் யாழ். பல்கலைக் கழகத்தின்மகத்தான ஆயுதம்பேனா முனையே தவிர துப்பாக்கிமுனை அல்ல என கண்டனம தெரிவித்து ஆர்ப்பாடடத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்திற்கு விஞ்ஞான சங்கம் ஊழியர்சங்கம் என்பனஆதரவுவழங்கியிருந்தன.

காலை 11மணிஅளவில்பல்கலை பிரதான வாயில் முன்பாக ஆரம்பமாகிய இவ் ஆர்ப்பாட்டம் மதியம் 12 மணிவரை நீடித்திருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஆசிரியர்கள் அச்சுறுத்தலும்கொலை மிரட்டலும் பயங்கரவாதமில்லையா? ஆசியாவின் அதிசயம் பல்கலைக்கழக ஆசிரியர்களை கொல்வதா?நினைத்தவேளை பல்கலைக் கழகத்தை மூடுவதுதான் மாணவர்மையக் கல்வியா? பல்கலைக்கழகம் என்பது கல்விக்களமா? அல்லது கொலைக் களமா? யாழ்.பல்கலைக்கழத்தின் மகத்தான ஆயுதம் பேனா முனையே தவிர துப்பாக்கி முனையல்ல, புரிந்து கொள்ளுங்கள் பல்கலைக்கழகத்தின் சுயாதீனத்தை உறுதிப்படுத்து என்ற வாசகங்களினை தாங்கிய பதாகைகளினை ஏந்தியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டம நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது புலனாய் வாளர் களின் நடமாட்டம் அங்கு அதிகமாகவே காணப்பட்டிருந்தது. (செ-4)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org